இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 113 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 16 – சனிக்கிழமை 02 டிசம்பர் 2023 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 113 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 16 - Saturday 02 December 2023 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (9)

# வெள்ளை இருட்டை விலக்க வந்த கறுப்பு நிலா!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் காலை திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மகிழ்ச்சி பொங்கிட துள்ளிக் குதித்துக் கொண்டு மேடையிலிருந்த ஒலி பெருக்கியின் முன்னால் நான் வந்து நின்றேன். அலைகடலெனக் குழுமி யிருந்த தமிழ் மக்களைப் பார்த்துச் சொன்னேன்.

**"தமிழ்ப் பெருங்குடி மக்களே!**

**கழக உடன்பிறப்புக்களே!**

**எல்லையற்ற மகிழ்ச்சியை ஏந்தி வந்துள்ள செய்தி! 27 ஆண்டுக் காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தென்னாப்பிரிக்கா நாட்டின் கறுப்பர் இனத்தலைவன் நெல்சன் மண்டேலா, விடுதலை செய்யப்பட்டு விட்டார் - இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட மாநாட்டுப் பந்தலில் குழுமியிருப்போர் அனைவரும் எழுந்து நின்று தொடர்ந்து கையொலி செய்யுங்கள்!"**

இந்தக் கருத்தமைந்த என் வேண்டுகோள் கேட்டு, மண்டேலா விடுதலையால் மகிழ்ச்சியில் ஆழ்ந்தோர், மாநாட்டில் "நான் போதும் போதும்" என்று கையமர்த்தும் வரையில், கடலில்லா திருச்சியில் கடலலைகளின் முழக்கத்தைச் செய்தனர்.

உத்தமர் காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் மனித உரிமைப் போர் நடத்தியபோதே நமது தென்னக மக்களின் ஆதரவையும் - அனுதாபத்தையும் பெற்றார் என்பதுபோல, மண்டேலா நடத்திய போராட்டத்தின்போதும் - தென்னிந்தியாவின் தமிழ் மக்களின் அனுதாபம் அவரது இயக்கத்திற்கு இருந்தது என்பதை இந்த நிகழ்ச்சி உலகத்திற்கு எடுத்துக்காட்டியது.

உலகமே அந்த ஒரு மனிதனின் சிறை வாசத்தைப் பற்றித்தான் அப்போது பேசிக் கொண்டும், கண் கலங்கிக் கொண்டுமிருந்தது. காந்தியடிகள் நடத்திய அந்தப் போராட்டத்தில் இந்திய நாட்டின் தமிழ் நிலத்துக்குச் சொந்தக்காரர்களான நாகப்பன், நாராயணசாமி என்ற வாலிபர்களும், தில்லையாடி வள்ளியம்மாள் என்ற பெண்மணியும், சிறை புகுந்து, உடல் நலிந்து, உயிர் விட்டார்கள் என்பது வரலாறு - அந்த வரலாறு என்றும் நினைக்கப்படும் வண்ணம், கழக ஆட்சியின் கைவண்ணத்தால் உருவான அரிய சின்னங்கள், இன்றும் அழியாச் சின்னங்களாக தஞ்சை தில்லையாடியில் விளங்குகின்றன. தென்னாப்பிரிக்காவிலும் கூட நமது இந்தியப் பிரதமராக நமது அணியின் நாயகராக விளங்கிய திரு. குஜ்ரால் அவர்கள், 1997ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் நாள், அந்தத் தியாகிகளின் நினைவிடம் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார் என்பது உணர்ச்சிமிக்க ஓர் நிகழ்ச்சியாகும்.

அந்தத் தென்னாப்பிரிக்காவில் கறுப்பர் இன விடுதலைக்காக, வெள்ளையர் ஆதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி, 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நெல்சன் மண்டேலா; பின்னர் விடுதலைக்குப் பிறகு, அந்த நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றது பற்றியும் - அவரது துணைவியர்கள் அவரது தியாகப் போருக்குத் துணை நின்றது பற்றியும் - அவரின் வாழ்க்கை வரலாறு கூறும் ஏற்றத் தாழ்வுகள் பற்றியும் - எதுவும் விளக்க வேண்டிய அவசியமின்றி, அந்த மாவீரனின் வைர நெஞ்சம் - அவன் வளர்ந்த சூழ்நிலை - ஏற்றுக் கொண்ட அடக்குமுறை - கட்டிக்காத்த தன்மான உணர்வு - வழுக்கல் இல்லாத பொதுவாழ்வு -

**கலைஞர் கடிதம்**

இவையனைத்தும் அவனது இளமைக் காலத்திலேயே வாய்க்கப் பெற்றவனாக இருந்ததை எண்ணி, வியப்பு அடைகிறோம் - அவ்வழி வளரும் இளைஞர்கள் எவராயினும், வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம்.

1918 ஜூலை 18 மண்டேலா பிறந்த நாளாகும் - கறுப்பின மக்களிடையே நெல்சன் மண்டேலா குடும்பத்தினர் ஃகோஸா இன வகையைச் சேர்ந்தவர்கள். அக்குலத்தின் தலைவராக மண்டேலாவின் தந்தை இருந்தார். அவர் பெயர் ஹென்றி கான்யிஸ் வா காட்லா என்பதாகும். அவருக்கு நான்கு மனைவிகள் - பனிரெண்டு குழந்தைகள் - மூன்றாம் மனைவியின் மகன்தான் நெல்சன் மண்டேலா.



**33- வயதில் இளைஞர் அணி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நெல்சன் மண்டேலா!**

குடிசையில் பிறந்து, குடிசையில் வளர்ந்தவர் - குடும்பத்துக்கு மொத்தம் மூன்று சின்னஞ்சிறு குடில்கள் - ஒன்று சமைத்திட! ஒன்று பொருள்களை சேமித்திட! ஒன்று உறங்கிட! பாய்களில்தான் படுக்கை அவர்கள் அனைவருக்கும்!

ஆரம்ப வயதில் ஆடுமாடுகள் மேய்க்கிற வேலை மண்டேலாவுக்கு - அவர் அன்னை எழுதப் படிக்க தெரியாதவர் - ஆயினும், மகனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி வைத்தார்.

1928ஆம் ஆண்டுக்குள் மண்டேலாவின் தந்தை இறந்து விடவே, அந்தத் தந்தையின் மைத்துனரான "ஜோன்கின்டாபா" என்பவர், மண்டேலாவின் படிப்பைக் கவனித்துக் கொண்டார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## சென்னையில் பெய்துவரும் கனமழை மற்றும் வங்கக்கடலில் உருவாகியுள்ள

# புயல் சின்னம் - அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் ஆய்வு!

**சென்னை, டிச.2-**

**சென்னையில் பெய்து வரும் கனமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் வங்கக்கடலில் உருவாக உள்ள புயல் சின்னம் காரணமாக மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (30.11.2023) சென்னை மாநகரில் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், வங்கக் கடலில் உருவாகவுள்ள புயல் காரணமாக மேற்கொள்ளப் பட வேண்டிய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

வடகிழக்கு பருவமழை 21.10.2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

**கனமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2023) சென்னை, ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆ.ராசா எம்.பி., துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சென்னை, ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, மழைநீர் வெள்ள பாதிப்பு தொடர்பாக கட்டுப்பாட்டு மையத்தை தொடர்பு கொண்ட பொதுமக்களிடம் தொலைபேசி மூலம் உரையாடி அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து, அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், ரிப்பன் மாளிகையில் தயார் நிலையில் உள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்பு குழுவினரை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து, மீட்பு உபகரணங்களையும் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்படும் பொதுமக்களுக்குத் தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுத்திட வேண்டும் என்றும்,

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 02-12-2023

# மணல் வீடு

**தி.மு.க. அரசுக்கு களங்கம் ஏற்படுத்த முடியுமா என்று பார்க்கிறது பா.ஜ.க. அரசு. அதற்கு அமலாக்கத் துறையைப் பயன்படுத்துகிறது. இரண்டு ஆண்டில் ரூ.4 ஆயிரத்து 730 கோடிக்கு மணல் எடுப்பில் முறைகேடு நடந்துள்ளதாக, வாய்க்கு வந்த ஒரு எண்ணிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது அமலாக்கத்துறை.**

**இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அந்த ஆற்றில் எவ்வளவு மணல் இருந்தது, இப்போது எவ்வளவு எடுக்கப்பட்டது என்று அவர்கள் எப்படிக் கணக்கிட்டார்கள்? ஆற்று மணலையே எண்ணும் வித்தை பா.ஜ.க. அரசுக்குதான் இருக்கிறது.**

**ரூ.4 ஆயிரம் கோடி, ரூ.5 ஆயிரம் கோடி என்று கட்டமைக்க நினைக்கிறார்கள். இப்படிச் சொல்லி விட்டு ஆதாரங்களைத் தேடப் போகிறார்களாம். இதன் பிறகுதான் மாவட்ட ஆட்சியர்களிடம் விசாரணை நடத்தப் போகிறார்களாம்? மாவட்ட ஆட்சியர்களிடம் விசாரணை நடத்துவதற்கு முன்னால் ரூ.4730 கோடி என்று எந்தக் கணக்கை வைத்துச் சொன்னார்கள்? சொல்கிறார்கள்?**

இந்த மாதிரியெல்லாம் மிரட்டல் விடுப்பது பா.ஜ.க.வின் தந்திரங்களில் ஒன்று. அதை பலமுறை பார்த்திருக்கிறோம்.

2016 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தனித்து போட்டியிட்டது. அப்போது பா.ஜ.க.வுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்ய பா.ஜ.க. அகில இந்தியத் தலைவர் அமித்ஷா தமிழகம் வந்தார். பட்டுக்கோட்டையில் 2016 மே 4ஆம் தேதி பிரச்சாரம் மேற்கொண்ட போது, "அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.20 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மணல் கொள்ளை நடந்துள்ளது. பாலில் ஊழல் செய்ய முடியும் என்று நிரூபித்த மாநிலம் தமிழகம்தான்" என்றார். அ.தி.மு.க. ஆட்சியின் 20 ஆயிரம் கோடி ரூபாய் மணல் கொள்ளையை மையமாக வைத்தே தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளும் பிரச்சாரம் செய்தார்கள். அதே அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கு வவ்வால் மாதிரி தொங்கியதும் பா.ஜ.க.தான். 20 ஆயிரம் கோடிக்கு ஏதாவது வழக்குப் போட்டிருக்கிறார்களா? நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? என்று தேடிப் பார்த்தால் ஏமாந்து போவீர்கள்!

2016 ஏப்ரல் 17ஆம் தேதி பா.ஜ.க.வின் பேஸ்புக் பக்கத்தில், "தாது, மணல், கிரானைட் மாஃபியாக்களால் தமிழகத்திற்கு ரூ.2.5 லட்சம் கோடி இழப்பு" என பிரச்சாரம் செய்யப்பட்டது. கடந்த ஏழு ஆண்டு காலத்தில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள். எதுவுமில்லை.

**2011 - 2021 பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் பொதுப்பணித் துறையை வைத்திருந்தவர்கள்தான் பன்னீர்செல்வமும் பழனிசாமியும். இவர்கள் இருவரையும் இடம் வலமாக வைத்து மேடையில் உட்கார்ந்து இருந்தவர்தான் பிரதமர் மோடி. இவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி மீண்டும் அவர்கள் தோளில் பயணம் செய்யக் காத்திருக்கும் கட்சிதான் பா.ஜ.க.**

எடப்பாடிபழனிசாமி ஆட்சியில் அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் குடும்பத்தினர் புதுக்கோட்டை மாவட்டத்தில் குவாரி தொழில் நடத்தினார்கள். 2017 ஏப்ரலில் விஜய பாஸ்கருக்குச் சொந்தமான 35 இடங்களில் வருமானவரித் துறை ரெய்டு நடத்தியது. அதில், புதுக்கோட்டையில் இருந்த விஜயபாஸ்கருக்கு வேண்டப்பட்ட குவாரிகளும் தப்பவில்லை. குவாரிகளில் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டதில் விதிகளை மீறிப் பல லட்சம் கன மீட்டர் அளவுக்குக் கற்கள் வெட்டப்பட்டது எல்லாம் வெளிச்சத்துக்கு வந்தது. கல்குவாரியில் மத்திய பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்திய போது பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தும் விதத்தில், அனுமதிக்கப்பட்டதைவிட நான்கு மடங்கு கற்களை வெட்டி எடுத்த விஷயத்தை வருமானவரித் துறை கண்டுபிடித்தது. கல்குவாரியில் மட்டுமே விதிகளை மீறி 500 கோடி ரூபாய்க்கு மேல் பணத்தைக் குவித்ததாகப் புகார் எழுந்தது. சட்டத்துக்குப் புறம்பாக மணலை அள்ளி வழுதப்பட்டி ஆற்றையே கபளீகரம் செய்துவிட்டதாக குற்றச்சாட்டு படிக்கப்பட்டது. ஆனால், அந்த விஜயபாஸ்கர் மீது இந்த 6 ஆண்டுக் காலத்தில் சட்டவிரோத பணப் பரிமாற்றத்திற்காக அமலாக்கத் துறை சிறு துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லை.

2017ல் நடந்த ரெய்டுக்குப் பிறகு விஜயபாஸ்கரின் நிலங்களையும் வங்கிக் கணக்குகளையும் வருமானவரித்துறை முடக்கியது. அதனை எதிர்த்து விஜயபாஸ்கர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். 2022 டிசம்பரில் இந்த வழக்கு நீதிபதி அனிதா சுமந்த் முன்பு விசாரணைக்கு வந்த போது, **"விஜயபாஸ்கருக்குச் சொந்தமான குவாரிகளில் அளவுக்கு அதிகமான கற்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், குறைவாகவே கணக்குக் காட்டி வரி ஏய்ப்பு நடத்தியிருக்கிறார். குட்கா, குவாரி நிறு வனங்களிடமிருந்து மொத்தம் ரூ.87.90 கோடி லஞ்சமாகப் பெற்றிருக்கிறார். அதற்கான எல்லா ஆதாரங்களும் விஜயபாஸ்கர் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டன. அதனால்தான் சொத்துகள் முடக்கப்பட்டன"** என வருமானவரித் துறை சொன்னது. குட்கா, குவாரி நிறுவனங்களிடம் இருந்து லஞ்சம் வாங்கியதாக வருமானவரித் துறையே ஒப்புக் கொண்ட பிறகும் விஜயபாஸ்கர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படியே தான் கிடக்கிறது வழக்கு.

**குட்கா வழக்கில் சி.பி.ஐ. வழக்கு நடத்துவதற்கும் மற்ற ஊழல் வழக்குகளில் லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணை நடத்துவதற்கும் அனுமதி தராமல் 'சனாதனி' ஆளுநர் ரவி என்ன இழுப்பு இழுத்தார் என்பதும் அனைவருக்கும் தெரியும். இத்தகையவர்கள்தான் ரூ.4 ஆயிரத்து 730 கோடி என்று மணல் வீடு கட்டுகிறார்கள்.**

●●

## தேங்கிய நீரை வெளியேற்ற - விரைந்து

# அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வீர்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, டிச.2–

விடாமல் பெய்து வரும் கடும் மழை காரணமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மழைநீர் எங்கும் தேங்காமல் விரைந்து வடிந்து வருகிறது. இருந்தும் ஆங்காங்கு ஒருசில இடங்களில் மழைநீர் தேங்கி உள்ளது. அவ்வாறு தேங்கி இருக்கும் நீரை விரைந்து வெளியேற்ற அனைத்து நடவடிக்கைளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேல், விடாமல் மழை கொட்டித் தீர்த்தாலும், பல இடங்களில் மழைநீர் தேங்காமல் இருந்தது. தொடர் மழை காரணமாகத் தற்போது சில இடங்களில் தேங்கிய மழைநீரும் விரைந்து வடிந்து கொண்டிருக்கிறது.

விரைவாகச் செயல்பட்டு, தேங்கிய நீரை வெளியேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். மழை தொடர்பான புகார்களுக்குச் சென்னை மக்கள் 1913, 044–2561 9204, 044–25619206, 044–25619207 ஆகிய எண்களிலும், 94454 77205 எண் மூலம் வாட்சாப் வழியாகவும் உதவிகளைப் பெறலாம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப்பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2023) சென்னை, ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில், கனமழையொட்டி மீட்புப் பணிக்காக தயார் நிலையில் உள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்பு குழுவினரை சந்தித்து, மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து, மீட்பு உபகரணங்களையும் பார்வையிட்டார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, துணை மேயர் மு. மகேஷ் குமார், வருவாய் நிருவாக ஆணையர் /கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## 2030 ஆம் ஆண்டிற்குள்

# எச்.ஐ.வி. - எய்ட்ஸ் தொற்று இல்லாத நிலையை உருவாக்கிடுவோம்!

## "உலக எய்ட்ஸ் நாள்" செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, டிச.2-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "உலக எய்ட்ஸ் நாள்" செய்தி வருமாறு:-

எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் முதல் நாள் உலக எய்ட்ஸ் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான (2023) உலக எய்ட்ஸ் நாளின் கருப்பொருள் "Let Communities Lead" "சமூகங்களுடன் இணைந்து செயல்பட்டு எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றினை குறைக்கும் செயலை முன்னெடுப்போம்" என்பதாகும்.

எச்.ஐ.வி தொற்றுள்ள பெற்றோரிடமிருந்து கருவிலுள்ள குழந்தைகளுக்கு நோய் பரவாமல் தடுத்திட, அனைத்து கருவுற்ற பெண்களுக்கும் சிறப்பு மருத்துவ சிகிச்சைகள், புதிய எச்.ஐ.வி தொற்றுக்கான பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. 13.78 லட்சம் கர்ப்பிணி பெண்களுக்கு பரிசோதனை சேவைகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் கர்ப்பிணி பெண்கள் மத்தியில் எச்.ஐ.வி எய்ட்ஸ் தொற்றின் தாக்கம்

2003இல் இருந்த 0.83 சதவீதமானது 0.17 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. மாவட்டந்தோறும் அரசு மருத்துவமனைகளில் செயல்படும் பால்வினை தொற்று சிகிச்சை மையங்கள், நம்பிக்கை மையங்கள் மற்றும் கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் போன்ற பல திட்டங்கள் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் நலன் கருதி "தமிழ்நாடு அரசு எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான அறக்கட்டளை" 2009 10இல் துவக்கப்பட்டு இது வரை 25 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசிடமிருந்து நிதி பெறப்பட்டு பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வி, மருத்துவம் மற்றும் ஊட்டச் சத்துக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மாநில அரசும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களும் இணைந்து ஈடுபாட்டுடன் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு திட்டங்களை செயல்படுத்தியமையால் தமிழ்நாட்டில் எச்.ஐ.வி தொற்றின் அளவு தற்போது 0.17 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது தேசிய சராசரியான 0.22 விழுக்காட்டை விடக் குறைவானதாகும்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று சிகிச்சைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட, உலக இளைஞர் நாளை முன்னிட்டு, மாநில மற்றும் மாவட்ட அளவில் 'Red Run' என்ற தலைப்பில் மினி மாரத்தான் போட்டிகள் 550 கல்லூரிகளில் நடைபெற்றன. இதன் தொடர்ச்சியாக, எச்.ஐ.வி/எய்ட்ஸ் பரவுதலைக் குறைக்கும் மகத்தான நோக்கத்துடன், சமூக மற்றும் மெய்நிகர் ஊடகத்தின் வாயிலாகவும், இணையதளம், கைபேசி, வானொலி, சுவரோவியம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் நேரடி மக்கள் தொடர்பு நிகழ்ச்சிகளின் மூலமாகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இவ்வாறு, எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி தமிழ்நாட்டில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்று இல்லாத நிலையை உருவாக்கிட உறுதியேற்று, இத்தொற்றினை 2030ஆம் ஆண்டிற்குள் முடிவுக்கு கொண்டு வரும் இலக்கினை அடைய இன்றே இலட்சியமாக ஏற்று பயணிப்போம். எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்று உள்ளோரும் நம்மில் ஒருவரே என்பதை மனதில் கொண்டு, அவர்களுக்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்வோம். மேலும், அவர்களை மனிதநேயத்துடன் அரவணைத்து ஆதரிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'உலக எய்ட்ஸ் தின நாள்' செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (9)

# வெள்ளை இருட்டை விலக்க வந்த கருப்பு நிலா!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

க்யூனு எனப்படும் மண்டேலா பிறந்த ஊரில், ஓய்வு நேரங்களில் பெரியோர்கள் கூறும் தமது இனத்தவர் பற்றிய பழைய கதைகளையும், வெள்ளையர்களால் தம்மின வரலாறுகள் மறைக்கப் பட்டதையும், வெள்ளையர் நுழைவுக்கு முன்பு அங்கிருந்த கலை, கலாச்சாரம், வாழ்க்கை முறைகளையும் பெரியோர்கள் கூறிடக் கேட்டு புத்துணர்ச்சி பெறும் மண்டேலா, படிப்பையும் விடவில்லை! ஆடு மாடு மேய்க்கும் வேலையையும் தொடர்ந்தார்.

அதே சமயம் தமது இனத்தாரின் துயர் துடைத்து, உரிமைகள் நிலை நாட்டப்பட வேண்டுமென்று அந்த இளம் வயதிலேயே அழுத்தமான உறுதி பூண்டார் மண்டேலா.

1938ஆம் ஆண்டு அவரது உறவினர் ஜோன்கின்டாபா முயற்சியினால், மண்டேலா, முதலில் "கெல்ட் டவுன்" கல்லூரியிலும் - பிறகு "போர்ட்ஹேர்" கல்லூரியிலும் சேர்க்கப்பட்டார்.

அப்போதுதான் அவரது முதல் போராட்டத்துக்கான துளிர் விடத் தொடங்கியது. அங்கே வெளிப்பட்ட இன வேற்றுமைக் கொடுமையை எதிர்த்து, இளைஞர் மண்டேலா தலைமையில் வேலை நிறுத்தம் அறிவிக்கப்படவே, கல்லூரி நிர்வாகம் மண்டேலாவை வெளியேற்றியது. ஆம் - மண்டேலாவுக்கு அவர் நடத்திய உரிமைப் போரில் கிடைத்த முதல் தண்டனை அது!

மன்னிப்பு கேட்டுக் கொண்டால் மீண்டும் கல்லூரியில் சேரலாம் என்று கூறப்பட்டது. அதை மானப் பிரச்சினை என்று கூறி மறுத்து விட்டார் மண்டேலா.

பின்னர் தனது மாமன் மகன் ஜஸ்டிஸ் என்பவருடன் சேர்ந்து ஜோகன்ஸ்பெர்க் நகருக்குச் சென்று தங்கச் சுரங்கத்தில் வேலை பார்த்தார். அங்கிருந்தும் அவரது உறவினர் தூண்டுதலால் வெளியேற்றப்பட்டதால், மண்டேலா, சட்டம் படித்திட முனைந்தார். 'லாசா சிடிங்ஸ்கி' என்ற வெள்ளைக்கார வழக்கறிஞரிடம் சட்டக் கல்வியில் பயிற்சி பெற்று திறமையாளரானார்.

மண்டேலா வாழ்க்கை, கட்டுப்பாடு மிக்கது என்றும், அதிகாலையில் எழும் வழக்கமுடையவர் என்றும் - நாளும் தவறாமல் நடைப் பயிற்சி மேற் கொண்டவர் என்றும் - எளிமையான உணவே அருந்தி, எப்போதும் சுறுசுறுப்புடன் பணியாற்றுபவர் என்றும் - பெண்களுக்குத் துணையாக அடுக்களை வேலைகளில் கூட ஈடுபடுவார் என்றும் - அவரது சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன.

கறுப்பர் இன மக்களுக்கும், வெள்ளையருக்குமிடையே கடுமையான புகைச்சலும் - மோதுதல்களும் இருந்த போதிலும், மண்டேலா, இரு தரப்பு மாணவர்களிடமும் பரந்த மனத்துடனும், பண்பாட்டுடனும் நேசமாகப் பழகி, அமைதியாக காந்திய வழியிலே அறப்போர் நடத்தி, இன வேற்றுமைக் கொடுமையை அகற்ற நினைத்தார்!

1948ஆம் ஆண்டு, மண்டேலா, இளைஞர் அணியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கால கட்டத்தில், கறுப்பின மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் அவர் கண்களை உறுத்தின. "காஃபிர்" என்ற இழிந்த வார்த்தையினால் கறுப்பின மக்கள் அழைக்கப் பட்டதையும் - தெருக்களில் நடமாட முடியாமல் தடுக்கப்பட்டதையும் - மண்டேலாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதுமட்டுமா? கறுப்பின மக்களின் நிலங்களை வெள்ளையர் பறித்துக் கொண்டனர் - வெள்ளையர் கறுப்பரிடையே காதல் மற்றும் கலப்பு மணங்கள் - சட்ட விரோதமாயின - இனப்பகை, பெரும் பகை - கறுப்பினத்தாருக்கு வேலைகள் மறுக்கப்பட்டன - கேளிக்கை இடங்களில் அவர்களுக்கு அனுமதியில்லை - மீறினால் கடும் தண்டனை.

இந்தக் கொடுமைகளை எதிர்த்து, 1948இல் இளைஞர் அணியின் செயலாளரான மண்டேலா, 1949இல் கூட்டிய மாநில மாநாடு ஒன்றில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை நடத்த தீர்மானம் நிறைவேற்றினார்.

அதைத் தொடர்ந்து, அவர், 1951இல் இளைஞர் அணியின் தலைவராகவே தேர்வு செய்யப்பட்டார். அப்போது அவருக்கு வயது முப்பத்தி மூன்று தான்! ஆம், வெள்ளை இருட்டை விலக்க கறுப்பு நிலாவின் பிறையாக அந்த இளைஞர் அணி தோன்றியது!

வெள்ளையர் வெறித்தனத்தை எதிர்த்து அமைதியாக அரும்பிய மண்டேலாவின் அறப்போர், புரட்சி மலராகவும் பூத்திடத் தவறவில்லை.

கறுப்பு இன மக்களின் மாணவர் போராட்டமும் தொடங்கியது.

புரட்சிகள் - கிளர்ச்சிகளின் விளைவாக - சிறைப்பட்ட மண்டேலாவை, நாட்டை விட்டு வெளியேறுவதாக இருந்தால், விடுதலை செய்வதாக தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசு கூறியது.

அதற்கு மண்டேலா மறுப்புரைத்து, "எங்களுக்கு சுதந்திர உரிமை இல்லையென்றால், நான் அடைபட்டுள்ள சிறைச்சாலையே திருப்தி அளிக்கக் கூடியது" என்று கூறிவிட்டார். அவர் நடத்திய போராட்டங்களின் தொடர்ச்சியாக, நீண்ட கால சிறை வாழ்க்கையைத்தான் அவர் ஏற்றுக் கொள்ள நேர்ந்தது. சிறையில் ஆரம்ப நிலையில் கேவலமான உணவு, அதுவும் பசியை அடக்கக் கூடியதல்ல - கல் தரையின் மீது உறங்குவதற்கு ஒரு பாய் - நாளேடுகள் வைத்திருந்தால் சிறை சட்டப்படி தண்டனை - நாள் முழுவதும் வேலை - ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும் உடைகள் அவிழ்க்கப்பட்டு சோதனை - இவ்வளவு கொடுமைகளையும் அனுபவித்த மண்டேலா, இளமை முதல் அவர் கொண்ட வைராக்கியத்தின் எதிரொலியாக சிறைக் கொடுமைகளைப் பற்றி அவர் சொன்ன வாசகம் பின் வருமாறு:-

**"சிறைக் கொடுமை என்னை இன்னலுக்கு ஆளாக்கவில்லை.**

**சிறைக்கு வெளியே என் மக்கள்**

**அனுபவிக்கும் துன்ப துயரங்களை எண்ணித்தான்**

**நான் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறேன்"**

என்பதாகும்.

மண்டேலாவின் இந்தத் தியாக வாழ்க்கை தென்னாப்பிரிக்க நாட்டு இளைஞர்களுக்கு மட்டுமல்ல, இந்தப் பூமிப் பந்தில் வாழ்ந்து கொண்டு புத்துலகம் காணத் துடிக்கின்ற ஏறுநடை இளைஞர்களுக்கெல்லாம் இதய கீதமாகும்.

1959ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் தேதி, மண்டேலா உள்ளிட்ட விடுதலை இயக்க வீரர்களின் வழக்கில் இவர்களுக்கு எதிராக வாதாடிய அரசு வழக்கறிஞர் பிரோ என்பவர், நோயால் சிக்குண்டு மறைந்து விட்டார் என்ற செய்தி வானொலியின் மூலம் அறிவிக்கப் பட்டது. அந்தச் செய்தியினை அறிந்த போராட்ட வீரர்கள் மன மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக, அவர் அரசு வழக்கறிஞராக தனக்கு அளிக்கப்பட்ட பணியினை சிறப்பாகச் செய்தார் என்ற வகையிலும், இன்னும் சொல்ல வேண்டுமேயானால், மனிதநேய மிக்க மனிதராகத்தான் அவர் செயல்பட்டார் என்ற வகையிலும், மறைந்த அந்த வழக்கறிஞருக்கு அஞ்சலி செலுத்த வேண்டியது தங்கள் கடமை என்பதைக் காட்டிக் கொண்டார்கள்.

தேச விடுதலைப் போராட்ட வீரர்கள் கைது செய்யப்பட்டு சுமார் 27 மாதங்களுக்குப் பிறகுதான் அவர்கள் மீதான வழக்கு விசாரணைக்காகவே எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவரும், தாங்கள் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லை என்று மறுப்பு தெரிவித்தனர். அவர்களுக்குத் தரப்பட்ட குற்றப் பத்திரிகை மட்டும் 2000 பக்கங்கள் கொண்டதாக இருந்தது. 210 சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டதில், 200 பேர் காவல் துறையைச் சார்ந்தவர்கள்.

வழக்கு விசாரணை, தொடர்ந்து திருச்சபை அமைந்துள்ள பழைய காலக் கட்டிடம் ஒன்றிலே நடைபெற்றது. அந்தத் திருச்சபையின் பாதிரியாருடைய அறைதான் உணவருந்தும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் திருமதி தையநாயகி பிள்ளை என்ற ஒரு அம்மையார்தான் தொண்டர் அணியினருடன் இணைந்து இந்திய முறைப்படி உணவுப் பொருட்களைத் தயாரித்து, விசாரணைக் கைதிகளுக்கு அளித்து வந்திருக்கிறார். முற்பகலில் வடையும், தேநீரும் என்றும், பிற்பகலில் அதுபோலவே ஏதாவது சிற்றுண்டியும், தேநீரும் என்றும், மதியம் இந்திய முறைப்படியான உணவு என்றும் அந்த அம்மையார் பரிமாறியிருக்கிறார். இவ்வாறு தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்ட வீரர்களுக்கு வழக்கு நடைபெற்ற நாட்களில் எல்லாம் உணவளித்து உபசரித்த அந்த திருமதி தையநாயகி பிள்ளை என்பவர் யார் தெரியுமா? அவர் தமிழ்நாட்டில் பிறந்த ஒருவரின் வழி வந்தவர் என்பதை, நெல்சன் மண்டேலா பற்றிய வாழ்க்கை வரலாற்றுப் பக்கங்களில் காணும்போது, நம்மையும் அறியாமல் ஒரு மகிழ்ச்சி நம் உள்ளத்தில் ஏற்படத்தான் செய்யும்.

இளம் வயதிலேயே புரட்சிக்காரராக மாறி, தென்னாப்பிரிக்காவின் விடுதலைக்காகப் பாடுபட்ட நெல்சன் மண்டேலாவைப் பற்றி நமது இளைஞர்களுக்கு நினைவூட்டுகின்ற இந்த நேரத்தில், அவர் கூறிய சில வரிகளோடு இன்றைய கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

"The Indian campaign became a model for the type of protest that we in the youth league were calling for"

(இளைஞர் இயக்கத்தின் சார்பில் நாங்கள் நடத்தி வரும் எதிர்ப்புப் போராட்டத்திற்கு, இந்தியர்கள் நடத்திய இயக்கமே முன் மாதிரியாக இருந்தது.)

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 16.11.2007)

---

### சென்னையில் பலத்த மழை:

# களப்பணியில் 15,300 மின்வாரிய ஊழியர்கள்!

### மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நடவடிக்கை!

சென்னை, டிச.2

சென்னையில் (29.11.2023) அன்று குறுகிய நேரத்தில் சராசரியாக 15 செ.மீ. மழை பெய்த போதிலும், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படியும், நிதி, திட்டமிடல் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு உத்தரவுப்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக தமிழ்நாடு முழுவதும் சிறப்பு மின் பராமரிப்பு பணிகள் 19.07.2023 அன்று தொடங்கப்பட்டு 29.11.2023 வரை நடைபெற்று 11,47,103 பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. 1545 துணை மின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 6,25,341 மரக்கிளைகள் மின்வழித்தடங்களில் இருந்து அகற்றப்பட்டது. 55,830 பழுதடைந்த மின் கம்பங்கள் புதிதாக மாற்றப் பட்டுள்ளது.



சென்னையில் கடந்த 8 ஆண்டுகளில் கண்டிராத அளவு மிக கனமழை (29.11.2023) அன்று பெய்த போதிலும், 240 துணை மின் நிலையங்களில் உள்ள 1,877 மின்பாதைகள் மூலம் முதலமைச்சர் அவர்களது அறிவுரையின் படி தடையற்ற மற்றும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டது. கனமழையினால் 8 மின்பாதைகளில் பழுது ஏற்பட்ட போதிலும் உடனடியாக மாற்றுப்பாதையில் சுமார் அரை மணி நேரத்தில் மின்னூட்டம் வழங்கப்பட்டு, பழுதுகளும் சரிசெய்யப்பட்டது.

சென்னையில் உள்ள 41,311 மின்மாற்றிகளில் 2 மின்மாற்றிகளில் மட்டும் பழுது ஏற்பட்டது. அவைகளும் உடனடியாக பழுதுகள் சரிசெய்யப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது.

சென்னையில் சென்ற ஆண்டு மழையின்போது நீர் தேங்கிய பகுதிகளில் கண்டறியப்பட்ட 4658 பில்லர் பாக்ஸ்களின் உயரம் ஒரு மீட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டதால் தற்போது மேற்படி பகுதிகளில் பாதுகாப்பான தடையற்ற சீரான மின்சாரம் வழங்கப் பட்டு வருகிறது.

மேலும், பருவ மழையை எதிர்கொள்ள தமிழ்நாடு முழுவதும் 3,00,887 மின்கம்பங்கள், 14,187 கி.மீ. மின் கம்பிகள், 19,759 மின்மாற்றிகள் மற்றும் மின் தளவாடப் பொருட்கள் கையிருப்பில் உள்ளது. மின் தடை ஏற்பட்டால் உடனுக்குடன் சரி செய்ய 15,300 களப்பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

பொதுமக்கள் மின் தடை சம்பந்தமான புகார்களை மின்னக எண்.94987 94987 வாயிலாக ஒரே நேரத்தில் 65 புகார்களை பதிவுசெய்து மேல் நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து மின் பகிர்மான வட்ட மின் தடை நீக்கம் மையம் வழியாகவும் புகார்களை தெரிவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

---

### தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (7)

### டிசம்பர் 3 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜீன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று " முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, டிசம்பர் 3 ஞாயிற்றுக்கிழமை அன்று முரசொலி சிறப்பிதழ், "கல்வியாளர்கள் பார்வையில் கலைஞர்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

---

### பத்திரப் பதிவுத்துறையில் - தேசிய அளவிலான

# தகவல்தொழில்நுட்பநிறுவனகருத்தரங்கம்!

### அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச. 2-

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி பத்திரப்பதிவுத்துறையில், நவீன தொழில் நுட்ப மேம்பாடு - "ஸ்டார் 3.0 மென்பொருள் திட்டம்" குறித்த தேசிய அளவிலான தகவல் தொழில் நுட்ப நிறுவனங் கள் கலந்து கொண்ட கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.

பதிவுத்துறையில் கணினிமயமாக்கல் என்கிற "ஸ்டார்" திட்டம் 6.2.2000 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் முன்னோடி திட்டமாக தொடங்கி வைக்கப்பட்டது. முதன்முதலில் 23 அலுவலகங்களில் தொடங்கப்பட்ட கணினிமயமாக்கல் திட்டம் பின்னர் படிப்படியாக அனைத்து பதிவு அலுவலகங்களுக்கும் விரிவாக்கப் பட்டது. நிர்வாக வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுமக்களிடம் எளிய அணுகுமுறை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு புதிய மேம்படுத்தப்பட்ட வலை அடிப்படையிலான ஸ்டார் 2.0 என்ற மென்பொருள் தற்போது பயன்பாட்டில் உள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் பதிவுத்துறையில் தனித்துவமான வசதிகளுடன், அதி நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய இணையவழி பதிவை எளிமையாக்கும் விதமாக ஸ்டார் 3.0 என்னும் புதிய மென்பொருளில் செயற்கை நுண்ணறிவை கூடுமான வரை பயன்படுத்துதல், மனித தலையீடின்றி தானாகவே சேவைகளை அளித்தல், பொதுமக்கள் அலுவலகம் வராமலேயே சேவைகளை பெறுதல், தற்போதைய இணைய தளத்தை புதுப்பித்து எளிமையாக்கல், மென்பொருளை அதி வேகமாக இயங்கவைத்தல், அனைத்து நிலைகளிலும் புதிய வன்பொருள் வழங்குதல், கிளவுட் தொழில் நுட்பம், கைபேசி செயலி உள்ளிட்ட சேவைகள் தொடர்பான கருத்துக்களையும் அவர்தம் மென்பொருள் சார்ந்த தொழில் நுட்ப தீர்வுகளை எவ்வாறு ஸ்டார் 3.0 திட்டத்திற்கு வழங்கி மெருகேற்றலாம் என்பதை தெரிவிக்க கருத்தரங்கில் கலந்து கொண்ட தேசிய அளவிலான தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கருத்தரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, பத்திரப்பதிவுத்துறைத் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத்துறைத் தலைவர் வி.நல்லசிவன், பதிவுத்துறை துணைத் தலைவர்கள் சேகர், அருள்சாமி, பதிவுத்துறை உயர் அலு வலர்கள் மற்றும் தேசிய அளவிலான தகவல் தொழில் நுட்ப முன்னனி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

# பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு திட்டப்பணிகள்!

### சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் அடிக்கல் நாட்டினார்!

பெரம்பலூர், டிச.2 -

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரம்பலூர் ஒன்றியம், சத்திரமனை அரசு மேல்நிலைப்பள்ளியில், மாணவ,மாணவிகள் பயன் பெறும் வகையில்,

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.6.10 இலட்சத்தில் மிதிவண்டி நிறுத்தத்திற்கு பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் அடிக்கல் நாட்டினார். இந்த அரசுப் பள்ளியில் சத்துணவு திட்டத்தையும் ஆய்வு செய்தார்.

அதேபோல் களரம்பட்டி ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.6.90 இலட்சத்தில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் தொடங்கி வைத்தார்.

அப்போது பெரம்பலூர் ஒன்றிய கழகச் செயலாளர் எம்.ராஜ்குமார்,

பெரம்பலூர் ஒன்றிய பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கனமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்...

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!...

முதல் பக்கத் தொடர்ச்சி

மின்தடை ஏற்படக்கூடிய இடங்களில் உடனடியாக மக்களுக்கு எந்தவித இடையூறுமின்றி மின்விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், தற்போது பெய்துவரும் கனமழையால் சாலைகளில் தேங்கியுள்ள மழை நீரை துரிதமாக அகற்றிவுடம், புதிதாக புயல் உருவாகவுள்ளதையொட்டி அதன்பொருட்டு பெய்யும் கனமழையால் அடுத்து வரும் சில நாட்களில் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம், சாலைகள், சுரங்கப் பாதைகள் இவற்றில் மழைநீர் தேங்காமல் உடனுக்குடன் அகற்றிட தேவையான மின் மோட்டார்கள் அமைத்திடவும், மழைநீர் கால்வாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்கிடவும், அப்பகுதியின் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மேலும், கடந்த இரு தினங்களில் மழைநீர் தேங்கிய இடங்களை குறிப்பாக கண்காணித்து, அங்குள்ள நீரை அகற்றிடவும், மீண்டும் அப்பகுதியில் மழைநீர் தேங்கா வண்ணம் உயர்சக்தி மின் மோட்டார்களை வைத்து நீரினை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் குடியிருப்பு பகுதி மக்களிடம் தொடர்பில் இருக்கவும் அறிவுறுத்தினார். அவர்களுக்கு தேவையான உணவு, பால், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்திடவும் அறிவுறுத்தினார்.

**கனமழை பெய்யவுள்ள மாவட்டங்கள்**

27.11.2023 அன்று உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவுகிறது. இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் அடுத்த 24 மணி நேரத்திற்குள் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளது. பின்னர், இது வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 48 மணிநேரத்திற்குள் மேலும் வலுவடைந்து தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் 2.12.2023 அன்ற புயல் சின்னமாக மாறக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

30.11.2023 கனமழை - செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள். (10 மாவட்டங்கள்), 01.12.2023 கனமழை-கடலூர், நாகப்பட்டினம், மயிலாடு துறை, திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை (6 மாவட்டங்கள்), 02.12.2023 மிக கனமழை சென்னை, திருவள்ளூர், காஞ்சி புரம், செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். (5 மாவட்டங்கள்)

கனமழை இராணிப்பேட்டை, கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள். (8 மாவட்டங்கள்), 03.12.2023 மிக கனமழை திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். (5 மாவட்டங்கள்),கனமழை இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். (8 மாவட்டங்கள்)

04.12.2023 கனமழை சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள். (5 மாவட்டங்கள்),

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின் பேரில் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

● பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கு 29.11.2023 அன்று, நீர்த்தேக்கங்களில் நீர் மேலாண்மை செய்வது, 437 முன்னெச்சரிக்கை அமைப்புகள் மூலம் மீனவர் களுக்கும், பொது மக்களுக்கும் எச்சரிக்கை தகவல்கள் வழங்குவது, பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பகுதிகளில் இருந்து பொது மக்களை முன் கூட்டியே பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பது, 121 பல் நோக்கு பாதுகாப்பு மையங்கள் மற்றும் இதர நிவாரண மையங்களை அனைத்து அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் வைத்திருப்பது ஆகிய அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ள, மீன் பிடிப்படகுகள் 29.11.2023க்குள் கரைக்குத் திரும்புமாறு மீனவர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு கரையில் இருந்த அனைத்து படகுகளும் பாதுகாப்பாக கரைக்கு திரும்பியுள்ளன.

தற்போது பெய்துவரும் கனமழையால் சாலைகளில் தேங்கியுள்ள மழை நீரை துரிதமாக அகற்றிவுடம், புதிதாக புயல் உருவாகவுள்ளதையொட்டி அதன்பொருட்டு பெய்யும் கனமழையால் அடுத்து வரும் சில நாட்களில் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம், சாலைகள், சுரங்கப் பாதைகள் இவற்றில் மழைநீர் தேங்காமல் உடனுக்குடன் அகற்றிட தேவையான மின் மோட்டார்கள் அமைத்திடவும், மழைநீர் கால்வாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்கிடவும், அப்பகுதியின் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இதுமட்டுமின்றி, மேற்குக் கரை யில், 477 படகுகள் பாதுகாப்பாக உள்ளன. மேலும், கரையில் உள்ள மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் உள்ள மீனவர்கள் கரைக்கும் திரும்புமாறும், கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கு எச்சரிக்கையும், பொது மக்களுக்கு புயல் குறித்த எச்சரிக்கையும் கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 437 முன்னெச்சரிக்கை அமைப்பு கள் மூலம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

**மீட்பு நடவடிக்கைகளுக்கு முப்படையைச் சேர்ந்த அலுவலர்கள்!**

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு முப்படையினை தயார் நிலையில் வைத்திட முப்படையினைச் சார்ந்த அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கண்காணிப்பு பணிகளுக்கென மாவட்டங்களுக்கு நியமிக்கப் பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் தொடர்புடைய மாவட்டங்களுக்கு விரைந்து சென்று மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைளை மேற்பார்வையிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 200 வீரர்கள் கொண்ட 8 குழுக்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையின் 225 வீரர்கள் கொண்ட 9 குழுக்கள் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் சென்னை மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள விரைந்துள்ளனர்.

121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், 4,967 நிவாரண முகாம்களும் அனைத்து மாவட்டங்களிலும் தயார் நிலையில் உள்ளன. மாநில அவசரகால செயல்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அளவிலான அவசரகால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் கூடுதலான அலுவலர்களுடன் இயங்குகின்றன.

புயல், கனமழை தொடர்பான முன்னெச்சரிக்கை தகவல்கள் TNSMART செயலி மூலமாகவும், Twitter, Facebook உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (29.11.2023) முதல் செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்திலிருந்து 1500 கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுவதால், பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் 5.23 இலட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று (30.11.2023) காலை 8.00 மணி முதல் புழல் நீர்த்தேக்கத்திலிருந்து 2000 கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுவதால், பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை குறுஞ் செய்திகள் அனுப்பப்பட்டு வருகிறது.

**கண்காணிப்பு அலுவலர்கள் முகாமிட்டு நிவாரணப் பணிகள்!**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி மற்றும் மாவட்டங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புடைய பகுதிகளில் முகாமிட்டு முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், தமிழ்நாடு கமாண்டோ படையினைச் சார்ந்த 50 வீரர்கள் கொண்ட 2 குழுக்களும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினைச் சார்ந்த 25 வீரர்கள் கொண்ட ஒரு குழுவும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

சென்னையில் 162 நிவாரண மையங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தாழ்வான பகுதிகளில் மழை நீரை வெளியேற்ற 296 நீர் இறைப்பான்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின் போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, துணை மேயர் மு. மகேஷ் குமார், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் எஸ்.ஏ. ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.


23-ஆம் ஆண்டு

நினைவு அஞ்சலி

வறுமையில் நேர்மை!
வளமையில் எளிமை!!

டிசம்பர் 02 2023



N.V.வீரய்யன் INA அவர்கள்

நகர தி.மு.க மு.அவைத் தலைவர்
நகரமன்ற மு.உறுப்பினர்
வர்த்தகர் சங்க மு.தலைவர்

...நீங்கா நினைவுகளுடன்...

வீரா.கணேசன் B.Com.,
நகர கழகச் செயலாளர்,
மன்னார்குடி.

வீரா.கதிரவன் M.A., M.L.,
மூத்த வழக்குரைஞர்,
அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்
உயர்நீதிமன்றம் - மதுரை.



திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோ.சி. மணி

டிசம்பர் 2 (2016)



தலைவர் கலைஞர் அவர்களால் 'தம்பி மணி' என பாசம் பொங்க அழைக்கப்பட்ட கழகத்தின் தளகர்த்தர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்த இவர், மிட்டா, மிராசுகள் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் ஒரு சாதாரண, தொண்டனாக திராவிட இயக்கக் கொள்கைகளையே தமது மூலதனமாகக் கொண்டு அதனை நெஞ்சில் ஏந்தி வலம் வந்தவர். சிறு வயது முதலே தன்னை இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டு ஓயாது பணியாற்றிய உயரிய பண்புக்கும் – எளிமைக்கும் சொந்தக்காரர்.

தந்தை பெரியார் அவர்களின் மேடைப் பேச்சால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்ட இவர், கழகம் தொடங்கிய 1949–ஆம் ஆண்டிலேயே மேக்கிரி மங்கலம் கிராமக் கிளையின் பொருளாளராகவும் – மயிலாடுதுறை வட்டக்கிளைச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மண்டலப் பொறுப்பாளராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் கழகத்தை வளர்க்க ஓய்வறியாது பாடுபட்டவர்! தலைவர் கலைஞர் அவர்களின் சொல்லே அவருக்கு வேத வாக்கு எனச் செயல்பட்டவர்.

தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காக மட்டுமின்றி, தமிழக விவசாயிகளுக்காகவும் போராட்டங்கள் பல நடத்தியதோடு மட்டுமல்லாமல், இவர் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இவர் குடந்தை மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் சந்திரசேகர்புரம் கூட்டுறவு மொத்தவிற்பனைப் பண்டக சாலையின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

இவர் 1962, 1989, 1996, 2001, 2006 என ஐந்து முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1968–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இரண்டு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றினார். 1989, 2006 ஆகிய இரு முறை வேளாண்மைத் துறை அமைச்சராகவும் – 1996ல் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் திறம்படப் பணியாற்றியவர்.

2001ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்குப் பெரியார் விருதினை, தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

"என்னரும் தளகர்த்தர் கோ.சி.மணி, எங்கோ போய்விட்டாரே!" என தலைவர் கலைஞர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## நாம் ஒன்றிணைந்து - மொழி வளர, பண்பாடு பெருக புதிய சகாப்தத்தை எழுதுவோம்!

# “இது இலக்கிய விழா மட்டுமல்ல; மாநில உரிமைகளைக் காக்கும் விழா!”

## கேரள மாநிலம் - கண்ணூர் பல்கலைக் கழக இலக்கிய விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழுரை !

**திருவனந்தபுரம், டிச.2 -**

**கேரள மாநிலம், கண்ணூர் பல்கலைக் கழக இலக்கியத் திருவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரையாற்றுகையில், “நாம் அனைவரும் ஒன்றிணைந்து மொழி வளர, பண்பாடு பெருக, ஒவ்வொரு தனி நபரும் தன்னுடைய பாரம்பரியத்தில் பெருமை கொள்ளவும் ஒரு புதிய சகாப்தத்தை நாம் எழுதுவோம்” எனவும், “இந்த விழா இலக்கிய விழா மட்டுமல்ல; மாநில உரிமைகளைக் காக்கும் விழா” எனவும் குறிப்பிட்டார்.**

கண்ணூர் பல்கலைக்கழக இலக்கியத் திருவிழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:

கேரளத்தின் பிரபலமான கண்ணூர் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இந்த இலக்கியத் திருவிழாவில் நான் கலந்துகொண்டு உரையாற்றுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

இலக்கியத்தை, எழுத்தாளர்களை, கலையை, கலைஞர்களைக் கொண்டாடுவதில் கேரளம் எப்போதும் முன்னணியில் இருக்கும் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

**பொய்ச் செய்திகளுக்கு எதிராகப் போராட வேண்டிய முக்கியப் பொறுப்பு!**

என்னுடைய உரைகளை, பாசிஸ்ட்டுகள் தவறாகத் திரித்து, பொய்ச் செய்திகளைப் பரப்பி வரும் இந்தச் சூழலில் நான் மிகுந்த கவனத்துடன் உரையாட வேண்டியிருக்கிறது.

பொய்ச் செய்திகளை எதிர்த்துப் போராடுவதில் நமக்கு மிக முக்கியப் பொறுப்பு இருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், சாதிப் பாகுபாடற்ற சமத்துவச் சமுதாயத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து, நான் பேசியிருந்தேன்.

என்னுடைய அந்த உரையை, தவறாகத் திரித்து, பா.ஜ.க. தன்னுடைய கீழ்த்தரமான அரசியல் சுயலாபத்துக்காகப் பரப்பி வருகிறது.

இந்தச் சூழலில், என்னுடன் நின்று எனக்கு ஆதரவளித்த கேரள மக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை, இத்தருணத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திராவிட இயக்கத்துக்கும் இலக்கியத்துக்குமான உறவு!**

என்னை இந்த இலக்கிய விழாவுக்கு அழைத்தமைக்காக உங்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன். இலக்கியம் மற்றும் மொழி ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஓர் இயக்கத்தைச் சார்ந்தவன் என்கிற முறையிலே என்னை நீங்கள் இந்த விழாவுக்கு அழைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நான் இங்கு தி.மு.க. அரசின் பிரதிநிதியாக இருப்பதால், திராவிட இயக்கத்துக்கும் இலக்கியத்துக்கும் இடையே உள்ள உறவைப் பற்றி நான் பேச விரும்புகிறேன்.

நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு நான் பங்குபெறும் முதல் இலக்கிய விழா இது. இதற்கு முன்பு சென்னை புத்தகக் காட்சியில் நிறைய முறை பங்கேற்றிருக்கிறேன். உரையாற்றியிருக்கிறேன்.

உங்களில் பலரும் கூட சென்னைப் புத்தகக் கண்காட்சியில் பங்கேற்றிருப்பீர்கள். அங்கு எந்த அளவிலான உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் பங்கேற்றேனோ அதே அளவு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் நான் இங்கே இருக்கிறேன்.

**தமிழ்நாடு - கேரளம் ஒற்றுமை உறவு !**

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், `உங்களுடைய நகரம்' என்று சொல்லி, நான் உங்களிடமிருந்து அந்நியப்பட விரும்பவில்லை. இது நம் நகரம். தமிழ்நாட்டுக்கும் கேரளத்துக்கும் இடையே அவ்வளவு ஒற்றுமைகள் இருக்கின்றன.

நமக்கு மொழி மற்றும் பண்பாட்டுத் தளங்களில் ஒரே மாதிரியான அணுகுமுறைகள் இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் தென் மாநிலங்களை, `திராவிட நிலம்' என்று அழைத்தார்.

**தமிழர்களின் உரிமைக்காக கேரள தலைவர்கள் போராட்டம்!**

தமிழ்நாட்டின் மூலைமுடுக்கில் இருந்தெல்லாம் தலைவர்கள் வந்து இங்குள்ள மக்களுக்கான உரிமைகளுக்காகப் போராடியிருக்கிறார்கள். அது போலவே, கேரளத்தின் தலைவர்கள் எல்லாம் வீதியில் இறங்கி, தமிழர்களின் உரிமைகளுக்காகத் தமிழ்நாட்டில் வந்து போராடியிருக்கிறார்கள்.

நீதிக் கட்சியைத் தொடங்கிய தலைவர்களில் ஒருவரான டாக்டர் டி.எம்.நாயர் அப்படிப்பட்ட தலைவர்களில் ஒருவர்தான்.

அதுபோலவே, தந்தை பெரியார் இங்கே வந்து, `வைக்கம் கோயிலை'ச் சுற்றியுள்ள தெருக்களில் மக்கள் நுழைவதற்கான போராட்டத்தை மேற்கொண்டார்.

பெரியார் முன்னெடுத்த அந்த வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அந்தப் போராட்ட நூற்றாண்டு விழாவின்போது, எங்கள் முதலமைச்சர் அவர்கள் கேரளத்துக்கு வந்தது நீங்கள் அறிந்ததே.

**கேரள தலைவர்களிடம் கலைஞர் கொண்டிருந்த நட்பு!**

பெரியார் காலத்திலிருந்தே திராவிட இயக்கத்துக்கும் கேரளத்துக்கும் இடையே மிக ஆழமான உறவு இருந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையில்லை.

இதற்கு ஓர் உதாரணமாக, என்னுடைய அனுபவத்திலிருந்தே ஒரு விஷயத்தைச் சொல்ல முடியும். தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள், கேரளத்தின் புகழ்பெற்ற முதலமைச்சர்க ளாகத் ஈ.கே.நாயனார், அச்சுத மேனன் மற்றும் உம்மன் சாண்டி ஆகியோருடன் அழகான நட்பைக் கொண்டி ருந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் - தமிழ்நாட்டின் முதலமைச்சரும் அதே மாதிரியான நல்லுறவை கேரளத்துடனும் - கேரள மாநிலத் தலைவர்களுடன் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணூர் பல்கலைக்கழகத்தின் இலக்கியத் திருவிழாவைப் பொறுத்த அளவில், இது தென்னிந்தியாவின் இதயமாக இருக்கிற, நம் மொழிகளை, பண்பாட்டை, சித்தா ந்தங்களைக் கொண்டாடும் ஒரு விழாவாக இருக்கிறது. இந்த நாட்டிலேயே அரசியல் மற்றும் பண்பாட்டு ரீதியில், தென்னிந்திய மாநிலங்கள் தான் மிகவும் ஆற்றலுடன் செயல்படுகின்றன.

சுற்றுலாவுக்கு மிகச் சிறந்த இடமாக கேரளம் இருக்கிறது. சுற்றுலாவில் பலவிதமான சுற்று லாக்கள் இருக்கின்றன. தமிழ்நாடு மருத்துவச் சுற்றுலாவுக்குப் பெயர் பெற்றது.

இந்த இடத்தில் நான் கேரள அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால்,, கண்ணூரில் அரசியல் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுதான். அந்த அளவுக்கு இந்த மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கைகள் இருக்கின்றன. இங்கிருந்துதான் கேரள முதலமைச்சர் திரு.பினராயி விஜயன் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பது மிகவும் முக்கியமான விஷயம்.

**அரண்களாகும் திராவிட இயக்கப் படைப்புகள்!**

தமிழ்நாடும் கேரளமும் மிகவும் வளமான இலக்கிய வரலாற்றைக் கொண்டுள்ளன. தமிழ்நாட்டின் இலக்கிய வரலாறு என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.

நமது திராவிட அரசியல் என்பது அத்தகைய வளமான இலக்கியத்தின் மீது எழுப்பப்பட்டுள்ளது. எங்கள் தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என எல்லோருமே தங்கள் எழுத்துகள் மூலம் திராவிட இயக்கத்தை வளர்த்தார்கள்.

அதனால்தான் திராவிட இயக்கத்தை, `எழுதியும்பேசியும் வளர்ந்த இயக்கம்' என்பார்கள். திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் மட்டுமே 100க்கும் அதிகமான இதழ்களை நடத்தினார்கள். முடிவெட்டும் கடைகள் - டீ கடைகளைப் படிப்பகம் ஆக்கினார்கள்.

அவர்களின் எழுத்துகளும் இலக்கியப் படைப்புகளும் இதுநாள் வரையும் எங்களுக்கு உந்துசக்தியாக இருந்துகொண்டிருக்கின்றன. அது வருங்காலத்திலும் அப்படியே இருக்கும் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன். அந்த திராவிட இயக்கத் தலைவர்களின் எழுத்துகளும் சிந்தனைகளும் படைப்புகளும்தான் தமிழ்நாட்டில் அழிவு சக்திகள் நுழைய முடியாத அளவுக்குப் பாதுகாப்பு அரண்களாக இருக்கின்றன.



**தமிழ்நாட்டில் அரசியல் சூழலை மாற்றிக் காட்டிய மொழிப்போர்!**

எந்த ஓர் இலக்கியத்துக்கும் மொழிதான் வேர். அந்த மொழியைக் காப்பாற்ற திராவிட இயக்கம் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தை மிக வலுவாக முன்னெடுத்ததை அனைவரும் அறிவர். 1930 மற்றும் 1960களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் தான், எங்கள் மாநிலத்தின் அரசியல் சூழலை மாற்றியமைத்தன.

**என்னை இந்த இலக்கிய விழாவுக்கு அழைத்தமைக்காக உங்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன். இலக்கியம் மற்றும் மொழி ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஓர் இயக்கத்தைச் சார்ந்தவன் என்கிற முறையிலே என்னை நீங்கள் இந்த விழாவுக்கு அழைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் இங்கு தி.மு.க. அரசின் பிரதிநிதியாக இருப்பதால், திராவிட இயக்கத்துக்கும் இலக்கியத்துக்கும் இடையே உள்ள உறவைப் பற்றி பேச விரும்புகிறேன்.**

நாங்கள் இந்திக்கோ, எந்த மொழிக்கோ எதிரானவர்கள் அல்ல. ஆனால், கட்டாயப்படுத்திப் படிக்க வேண்டும் என்று சொல்கிறபோது - அந்தப் பாசிச மனநிலையைத்தான் அன்றைக்கு எதிர்த்தோம். ஒன்றிய அரசால், இன்றைக்கும் எதிர்க்கிறோம்.

கேரளமும் இந்த விஷயத்தில் விதிவிலக்கு அல்ல என்று நம்புகிறேன். தமிழ்நாட்டுடன் இணைந்து கேரளமும் முன்னேற்றப் பாதையை வகுத்துக் கொடுத்து, அடிப்படைவாத சக்திகளுக்கு எதிராக எப்படிப் போராட வேண்டும் என்பதை இந்த நாட்டின் பிற மாநிலங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது.

அதைப் பற்றிச் சிந்திக்கும்போது, தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்த வேர்களை நான் திரும்பிப் பார்க்கிறேன்.

**எதிரிகள் அஞ்சும் கலைஞரின் பேனா!**

1952. தமிழ்த் திரை உலகத்தின் முகத்தை மாற்றியது ஒரு தமிழ்ப் படம். அந்தப் படம், அதுவரையில் திரையில் காட்டப்பட்டு வந்த அரசியலையும் சமுதாயத்தையும் வலுவாக அசைத்துப் பார்த்தது. இன்று வரையிலும் அது காலம் கடந்து நிற்கும் ஒரு செவ்வியல் படைப்பாகவும், இன்றும் பல தளங்கில் பொருத்தமாக அமையும் படமாகவும் நிலைபெற்றிருக்கிறது.

அந்தப் படத்தை, திராவிட இயக்கத்தின் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவர்தான் எழுதினார். அந்தப் படம், ‘பராசக்தி’. அதை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த உயரிய படைப்பு, இன்று வரைக்கும் முற்போக்கு எழுத்தாளர்களுக்கும், தமிழ் சினிமா நடிகர்களுக்கும் ஒரு கையேடாக இருந்து வருகிறது.

‘பராசக்தி’யின் மையமாக, சமூகத்தின் மீதான ஆற்றல் வாய்ந்த ஒரு விமர்சனம் இருந்தது. சுதந்திரத்துக்குப் பிறகான இந்தியாவில் நிலவிய பல்வேறு சமூகப் பிரச்சினைகளை அது படம்பிடித்துக் காட்டியது. சாதிப் பாகுபாடு, ஆன்மிகத்தின் பெயரால் நடைபெறும் மோசடிகள் மற்றும் சாமானிய மக்களின் போராட்டங்கள் ஆகியவற்றை மிகத் துணிச்சலாக அந்தப் படம் பேசியது.

பல இலட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கும், தொடர்ந்து பின்பற்றப்படும் சமூகப் படிநிலைகளுடன் இந்தியா மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் இந்த நாளிலும், சாதி பாகுபாடு தொடர்பாக அந்தப் படம் காட்டிய விஷயங்கள், இன்றளவும் மிகப் பொருத்தமாக இருக்கின்றன.

`பராசக்தி' அன்றைக்கு இருந்த சமூக அவலங்களைப் பற்றி மட்டும் பேசவில்லை. நிறைய இளைஞர்கள் - பிற்படுத்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்கள் அரசியலை நோக்கி வரவும் காரணமாக அமைந்தது.

இந்த விஷயங்களை எல்லாம் எழுபது ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறார்கள் என்றால் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். ஒரு பேனாவின் மூலமாக ஒரு மிகப் புரட்சி எப்படி ஏற்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அதை நீங்கள் உணர்ந்துகொண்டால், இன்று வரையிலும் கலைஞரின் பேனா என்பது எதிரிகளுக்கு ஏன் அச்சமூட்டக் கூடிய பொருளாக இருக்கிறது என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியும். பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரிடமிருந்துதான் தனக்கான உந்துவிசையைக் கலைஞர் பெற்றார்.

**நூறு ஆண்டுகளுக்கு முன்பே பெண்ணியம்!**

தமிழ்நாட்டில், இந்த மூவரும்தான் திராவிட இயக்கத்தின் முதுகெலும்பாக இருந்தார்கள். தங்கள் வாழ்நாள் முழுவதும் ஆயிரக்கணக்கான பக்கங்களில் சுயமரியாதை மற்றும் முற்போக்குச் சிந்தனைகளை எழுதி, அவற்றைத் தமிழ்நாட்டின் தனித்தன்மைகளாக மாற்றியதற்கு நாங்கள் மிகவும் நன்றி கடன்பட்டிருக்கிறோம்.

தங்களின் மரணம் வரையிலும் அவர்கள் எழுதிக் கொண்டே இருந்தார்கள். பல இலட்சக்கணக்கான ஒடுக்கப்பட்டவர்கள், விளிம்புநிலை மக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அவர்கள் எழுதினார்கள். அவர்களின் எழுத்துகள் என்ன செய்தன என்று உங்களுக்குத் தெரியுமா? அவை பிற்போக்கு சக்திகளை விரட்டியடித்தன.

அந்த மாபெரும் புரட்சியைத் தொடங்கிய பெரியாரில் இருந்தே நான் தொடங்குகிறேன். அவர் எவ்வளவுக்கு எவ்வளவு ஒரு தலைவராக இருந்தாரோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவர் ஓர் எழுத்தாளராகவும் இருந்தார். இந்த மாநிலத்தையும் மக்களையும் நித்திரையில் இருந்து விழிக்கச் செய்ய அவர் எழுதினார்.

அவருடைய எழுத்துகளும் பேச்சுகளும் அதுவரையில் மண் மூடியிருந்த திராவிட மக்களின் வரலாற்று மற்றும் பண்பாட்டு அடையாளங்களை மீட்டுக் கொண்டு வந்தன. அவர்களுக்கென்று ஒரு தனித்த அடையாளத்தைக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்தின.

**பெண் ஏன் அடிமையானாள்? தந்தை பெரியார் எழுதிய நூல்!**

இன்றைக்கு நாம் பெண்ணியம் பேசும் இலக்கியப் படைப்புகளை அதிகளவில் பார்க்கிறோம். ஆனால் நூறு ஆண்டுகளுக்கு முன்பே, ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்கிற புத்தகத்தை அவர் எழுதினார். இன்று வரையிலும் அந்தப் புத்தகம் மிகச் சிறப்பாக விற்பனையாகி வருகின்றது.

சொல்லப்போனால், பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் உரிமை ஆகியவற்றுக்குக் குரல் கொடுத்து, தன் காலத்துக்கு முந்தியிருந்தார் பெரியார். பெண்கள் மீதான ஒடுக்குமுறை குறித்து அவரது எழுத்துகள் பேசின. ஆணாதிக்கத்தை உடைத்தெறிய அவர் கடுமையாக உழைத்தார். தன்னுடைய சிந்தனைகளுக்குச் செயல் வடிவமும் கொடுத்தார். மேற்கத்திய நாடுகள் ‘பெண்களுக்கு வாக்குரிமை’ என்பதைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்பே அல்லது அதைச் செயல்படுத்துவதற்கு முன்பே, பெண்கள், கணவரை இழந்தவர்கள், பாலியல் தொழிலாளிகள், குடும்பத்தால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து 1929ஆம் ஆண்டு, சுயமரியாதை மாநாடு ஒன்றை பெரியார் நடத்தினார்.

சாதி முறை குறித்து அவர் எழுதிய விஷயங்கள்தான், சமூகநீதி மற்றும் சமத்துவம் குறித்த பரவலான உரையாடலுக்கு அடிகோலியது.

சுயமரியாதைத் திருமணங்கள் குறித்து வலுவாகப் பேசி வந்த அவர், தன்னுடைய படைப்புகளில் அத்தகைய திருமணங்களின் கொள்கைகள், முக்கியத்துவம் ஆகியவை குறித்து எழுதியிருக்கிறார்.

**சுயமரியாதைத் திருமணங்களை சட்டமாக்கிய அண்ணா!**

பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் எங்களது தி.மு.க. அரசு ஆட்சியமைந்தவுடன், 1967ஆம் ஆண்டு சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்ட ரீதியான அங்கீகாரத்தை வழங்கியது.

“யார் சொல்லியிருந்தாலும் எங்கு படித்திருந்தாலும் நானே சொன்னாலும், உனது புத்திக்கும் பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே” என்பதைத்தான் பெரியார் எங்களுக்குச் சொல்லிச் சென்றார். எதையும் பகுத்தறிய வேண்டும். கேள்வி கேட்க வேண்டும் என்பதுதான் பெரியார் எங்களுக்குச் சொன்னது.

அதை இன்றளவும் தி.மு.க பின்பற்றி வருகிறது என்பதை நான் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் ஆட்சியில் இருக்கிறோமோ, இல்லையோ... ஆனால், எப்போதும் பெரியார் எந்த விஷயங்க ளுக்காகக் களமாடினாரோ, அந்தப் போராட்டங்களைத் தி.மு.க. முன்னெடுத்துச் செல்லத் தவறியதில்லை.

**தொடரும் பாரம்பரியம்!**

தி.மு.க.வின் நிறுவனரும், முன்னாள் முதலமைச்சருமான பேரறிஞர் அண்ணாவின் இலக்கிய நிபுணத்துவத்தைப் பற்றிப் பேச எனக்குச் சொற்கள் போதாது. அவர் ‘பேரறிஞர்’ என்ற பட்டத்தைப் பெற்றதே, அவருடைய அறிவாளுமை மற்றும் பேச்சுத் திறனால்தான்.

அவருடைய நாடகங்களும் கதைகளும் சமுதாயத்தில் நிலவி வந்த சமூக அநீதிகளைப் படம்பிடித்துக் காட்டின. சமூக நீதி, பொருளாதாரம், மாநில உரிமை, மொழி உரிமை மற்றும் இன்னும் பல விஷயங்களைப் பற்றி அண்ணா எழுதினார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என மூவருமே, பழமையான இலக்கியப் படைப்புகளை விமர்சித்தது மட்டுமல்லாமல், பகுத்தறிவையும் பரப்பினார்கள்.

தமிழில் உள்ள வளமான இலக்கியத்தைச் சாமானிய மக்களுக்கு அவர்கள்தான் காட்டினார்கள். திராவிட இயக்கம் தோன்றுவதற்கு முன்பு, பக்தி இலக்கியம் மட்டுமே இலக்கிய உலகில் முதன்மையானது என்று மக்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். திராவிட இயக்கம் வந்த பிறகே, சாமானிய மக்களுக்காகவே எழுதப்பட்ட திருக்குறள் மற்றும் சங்க இலக்கியங்கள் ஆகியவற்றின் மீது பரவலான ஒளி பாய்ச்சப்பட்டது.

குறிப்பாக, திருக்குறளுக்குக் கலைஞர் தன்னுடைய பாணியில் உரை எழுதியிருக்கிறார். அதிலிருந்து ஒரே ஓர் உதாரணத்தை மட்டும் காட்ட விரும்புகிறேன்.

‘தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழு
தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை’ என்கிறது குறள்.

பலரும் இதை, ‘கடவுளை அல்லாது கணவனை வணங்கும் பெண் சொன்னால், சொன்னவுடனே மழை பெய்யும்’ என்று அர்த்தப்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆனால் கலைஞர் இதற்கு வேறு ஒரு பொருளைத் தருகிறார். அதை அறிந்துகொள்வதன் மூலம், திராவிட இயக்கம் எவ்வளவு தொலைநோக்குடன் இயங்கி இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும்.

கணவன் வாக்கினை கடவுள் வாக்கினை விட மேலானதாகக் கருதி அவனையே

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

## 2024 - நாடாளுமன்றத் தேர்தலில் - இந்திய ஒன்றியத்தையும், மாநிலங்களையும் பாதுகாக்க பாசிச பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும்!


கோவை ஒருங்கிணைந்த
திமுக மாவட்ட இளைஞரணி
செயல்வீரர் கூட்டத்திற்கு வருகை தரும்
முத்தமிழறிஞரின்
இளைய
தமிழே!
வருக! வருக!
மாண்புமிகு அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள்,
வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை
நா.கார்த்திக் Ex.MLA.,
கோவை மாநகர்
மாவட்டச் செயலாளர்
தளபதி முருகேசன்
கோவை தெற்கு
மாவட்டச் செயலாளர்
தொ.அ.ரவி
கோவை வடக்கு
மாவட்டச் செயலாளர்
ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக


நீலகிரி மாவட்ட திமுக இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து சிறப்பிக்க
நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தரும்...
கழக இளைஞர் அணி செயலாளர், விளையாட்டுத்துறை அமைச்சர்
இளைஞர்களின் எழுச்சி நாயகன்
மாண்புமிகு.
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வாழ்க!! வெல்க!!!
ஆ.இராசா B.Sc.,ML.,MP., கழக துணை பொதுச்செயலாளர்
கா.ராமசந்திரன் தேர்தல் பணி செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர்
பா.மு.முபாரக் மாவட்ட கழக செயலாளர்
மற்றும் கழக நிர்வாகிகள் மாவட்ட திமுக - நீலகிரி

# பெரியார் காலத்திலிருந்தே திராவிட இயக்கத்துக்கும், கேரளத்துக்கும் ஆழமான உறவு உண்டு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

தொழுதிடும் மனைவி, பெய் என ஆணையிட்டவுடன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழைய போலத் தன்னை அடிமையாகக் எண்ணிக் கொள்பவள்.

ஒவ்வொருவரும் தங்கள் வசதிக்கேற்ப அர்த்தப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை திருக்குறள் வழங்குகிறது. எனினும், கலைஞர் தரும் விளக்கமோ, திராவிட இயக்கத்தின் கொள்கையைப் பறைசாற்றுகிறது. அத்தகைய ஒரு முற்போக்கான, தொலை நோக்குடன் சிந்திக்கும் ஓர் இயக்கத்தின் பிரதிநிதியாக நான் இங்கே நிற்கிறேன் என்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

**நம் தலைவர், முதல்வர் எழுதிய “உங்களில் ஒருவன்” நூல்!**

தன்னுடைய வழிகாட்டிகளைப் போலவே, எனது தந்தை, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் ‘உங்களில் ஒருவன்’ என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அது பிற்பாடு ஆங்கிலத்தில் ‘ஒன் அமங் யூ’ என்ற தலைப்பில் பத்திரிகையாளர் ஏ.எஸ். பன்னீர்செல்வம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எப்படித் திராவிட இயக்கத் தலைவர்கள் இலக்கியத்திற்கும் - வாசிப்புக்கும் முக்கியத்துவம் தந்தார்களோ, அதே வழியில் தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2009ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நூலகத்தைச் சென்னையில் திறந்தார்கள்.

இன்றைக்கு, கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, ரூ.250 கோடியில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

நான் தமிழ்நாடு அரசின் அமைச்சர் மட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் செயலாளராகவும் இருக்கிறேன். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் ‘கலைஞர் நூலகங்களை’த் திறக்க எங்கள் தலைவர் அறிவுறுத்தினார்கள். அந்தப் பணியைத் தற்போது தொடங்கியுள்ளோம்.

**திராவிட இயக்கத்தின் வழிகாட்டி எழுத்துகள்!**

கழகத்தின் குரலாக இருக்கும் ‘முரசொலி’, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், கையெழுத்து வாரப் பத்திரிகையாகத் தொடங்கப்பட்டது. ‘முரசொலி’யை கலைஞர் தன் ‘மூத்த பிள்ளை’ என்பார். இன்று அது 75 ஆண்டுகளைக் கடந்து வெளிவரும் நாளிதழாக வளர்ந்திருக்கிறது.

அந்த இதழில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘உடன்பிறப்பே’ என்ற தலைப்பில், ஆயிரக்கணக்கான கடிதங்களைத் தனது உடன்பிறப்புகளுக்காக இறுதி வரையில் எழுதி வந்தார். நெருக்கடி நிலை காலகட்டத்தில், அதை எதிர்ப்பதில் முன்னணியில் நின்றது ‘முரசொலி’.

தற்போது, ‘முரசொலி’யில் நமது முதலமைச்சர் அவர்களும் அரசியல் தெளிவூட்டும் கடிதங்களை எழுதி வருகிறார். அது மட்டுமல்லாமல், தி.மு.க. இளைஞர் அணியின் சார்பாக, ‘முரசொலி’யில், ‘முரசொலி பாசறை பக்கம்’ என்ற பெயரில், 2023 ஜனவரி முதல் தனிப் பக்கம் ஒன்றையும் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சிறப்புப் பக்கத்தின் முதன்மையான நோக்கம், இன்றுள்ள இளைஞர்களுக்குத் திராவிட இயக்கத்தின் வரலாற்றையும் சித்தாந்தத்தையும் எடுத்துச் செல்வது என்பதே!

திராவிட இயக்கத்தில் பங்குகொண்ட பெண் எழுத்தாளர்கள் சிலரது பெயர்களைப் பற்றியாவது நான் இங்குக் குறிப்பிடாமல் போனால், எனது உரை நிறைவடையாது.

**திராவிட இயக்கத்தின் பெண் எழுத்தாளர்கள்!**

அன்னை மணியம்மையார், திருச்சி நீலாவதி, பெனாங்க் ஜானகியம்மாள் - டாக்டர் தர்மாம்பாள், மூவலூர் இராமாமிர்தம், மரகத வள்ளியார் and மலர்முகத்தம்மையார் போன்றோர் திராவிட இயக்கத்தில் பங்கேற்று, சுயமரி யாதை மற்றும் பெண்கள் மேம்பாடு குறித்து நிறைய எழுதியிருக்கிறார்கள். அதிலும் மரகதவள்ளியார், ஆதி திராவிடர்களின் துயரங்க ளைப் பற்றி மிகவும் விரிவாக எழுதியிருக்கிறார்.

ஒரு மாநிலத்தை உருவாக்குவதில் இலக்கியம் மிக முக்கியப் பங்காற்றுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். எங்களது தலைவர்களின் எழுத்துகள் எங்களது வழிகாட்டிகளாக இருக்கும் வரை, தமிழ்நாடு முன்னேறிய, முற்போக்கு மாநிலமாக இருந்துகொண்டிருக்கும்.

**ஒன்றிய அரசின் தவறான அணுகுமுறை!**

தி.மு.க. எப்போதும் விட்டுக்கொடுக்காத இன்னொரு விஷயம், கூட்டாட்சி எனும் சிந்தனை. 1949 ஆம் ஆண்டுத் தி.மு.க. தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே நாங்கள் மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருகிறோம்.

‘அனைத்துக்கும் ஒரே அளவு பொருந்தும்’ என்கிற முறை, இந்தியா போன்ற பன்மைத்துவம் கொண்ட நாட்டுக்கு ஒத்துவராது என்பதில் நாங்கள் ஆழமான நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

தனது மக்களுக்கு என்ன வகையான நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டும் என்பது குறித்து ஒவ்வொரு மாநிலத்துக்கும் போதுமான அளவு சுதந்திரம் கொடுத்து, விரிவான கொள்கைகளை ஒன்றிய அரசு வடிவமைக்க வேண்டும்.

இந்த அணுகுமுறை மூலம், மாநிலங்கள் தனித்துவமான, புதுமையான திட்டங்களைத் தீட்டும். அதன் மூலம், வெவ்வேறு மாநிலங்கள் அத்தகைய திட்டங்களில் இருந்து சிறந்த நடைமுறைகளைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**திராவிட மாடல் ஆட்சியில் ஏற்பட்டுள்ள கல்விப் புரட்சி!**

தமிழ்நாட்டில் கல்லூரிகளுக்கு உயர் கல்வி கற்கச் செல்லும் மக்களின் எண்ணிக்கை, அதாவது, ‘கிராஸ் என்ரோல் மென்ட் ரேஷியோ’, 50 சதவீதமாக இருக்கிறது. இது அமெரிக்காவைக் காட்டிலும் சிறந்த எண்ணிக்கை. அங்கு இது 41 சதவீதமாக மட்டுமே இருக்கிறது. மட்டுமல்லாமல், பல ஸ்காண்டிநேவிய நாடுகளுடன் ஒப்பிடும் அளவுக்கும் தமிழ்நாட்டின் இந்தச் சாதனை இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சிக்கு இது ஒரு சிறந்த சான்று.

இவையெல்லாம் சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. தமிழ்நாட்டைப் போலவே, வேறு சில மாநிலங்கள், வேறு சில துறைகளில் மிக நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கலாம். மாநிலங்கள் ஒவ்வொன்றும் இன்னொரு மாநிலத்திடமிருந்து பரஸ்பரம் கற்றுக் கொண்டு, பொருத்தமான நடைமுறைகளைத் தத்தமது மாநிலங்களில் செயல்படுத்தலாம். ஆகவேதான், தங்கள் மாநிலத்துக்குப் பொருந்தி வரக் கூடிய மக்கள் நலத் திட்டங்களைத் தீட்ட, மாநில அரசுகளுக்கு இடம் வேண்டும் என்றும், அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த உதவி புரியும் உந்து சக்தியாக ஒன்றிய அரசு இருந்தால் போதுமென்றும் நாங்கள் வாதிடுகிறோம். உண்மையான கூட்டாட்சி என்பது இப்படியாகத்தான் இருக்க முடியும்.

ஆனால் துர்பாக்கியமாக, கடந்த சில ஆண்டுகளாக, ஒன்றிய அரசு இந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக, எந்தெந்த வழியில் எல்லாம் அதிகாரத்தைத் தன்னிடம் மட்டுமே வைத்துக் கொள்ள முடியுமோ, அந்தந்த வழிகளில் செயல்பட்டு, தனது இஷ்டத்துக்கு மாநில அரசுகளை ஆட்டுவிக்கிறது ஒன்றிய அரசு.

நாடு முழுவதிலும் சுதந்திரமான விசாரணை அமைப்புகளை, தன் அரசியல் எதிரிகளை வேட்டையாடுவதற்காக ஒன்றிய அரசு பயன்படுத்தி வருகிறது.

**பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் ஆளுநர்களின் மாநில நிர்வாகச் சீர்குலைப்பு!**

பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்குத் தனது ஆட்களை ஆளுநர்களாக அனுப்பி அந்த மாநிலங்களின் நிர்வாகத்தைச் சீர்குலைத்து வருகிறது. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டு ஆளுநர் இருந்து வருகிறார்.

மிகச் சமீபமாக, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்புச் சீரழித்து, எங்களைப் பின்னுக்கு இழுக்கும் நடவடிக்கை ஒன்றை ஒன்றிய அரசு எடுத்திருக்கிறது. அதுதான், தேசிய மருத்துவக் கவுன்சில் மூலம் வெளியிடப்பட்ட நெறிமுறைகள். அதன் படி, ஒவ்வொரு 10 இலட்சம் பேருக்கு, 100 எம்.பி.பி.எஸ். சீட்டுகள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற விகதாசா ரத்தைப் பின்பற்ற வேண்டும் என்று ஒன்றிய அரசு கூறு கிறது. இது, தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை வெகுவாகப் பாதிக்கும்.

ஆனால் இதற்கு எதிராக எங்களது முதலமைச்சர் அவர்கள் குரல் கொடுத்தவுடன், அந்த நடவடிக்கையைத் தற்காலிகமாக ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

**மாநிலங்களின் வளர்ச்சியே, நாட்டின் வலிமை!**

இன்று நாம் கூடியிருப்பது, நம் இலக்கிய வளங்களைப் பற்றிப் பேசி கலைந்து செல்வதற்காக மட்டும் அல்ல. நம்முடைய அடையாளத்தை, போராட்டங்களை, விருப்பங்களை வரையறுக்கும் வளமான மொழிப் பாரம்பரியத்தைக் கௌரவப்படுத்தும் நிகழ்வாகவும் இதைக் கருத வேண்டும்.

வெறும் தொடர்பு கொள்ளும் ஊடகமாக மட்டுமே நமது மொழிகள் இருக்கவில்லை. அவை நம் பண்பாட்டின் விழுமியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. நம் முன்னோர்களின் சிந்தனைகளையும், வெற்றிகளையும் எதிரொலிக்கின்றன. அவர்கள் முன்னெடுத்த போராட்டங்களின் வெளிச்சத்தை நமக்குக் கைமாற்றிச் செல்கின்றன.

ஒருவர் எந்த மொழியில் பேசினாலும், தனது பண்பாட்டின் தொடர்ச்சியைப் பற்றிப் பேசவும், படிக்கவும், பாதுகாக்கவும் அவருக்கு உரிமை உண்டு. அந்த உரிமையைப் பேணுவதில் நம் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உள்ளது.

நம் உரையாடலின் இன்னொரு மையமாக இருக்கும் மாநில உரிமை என்பது, சுயநிர்ணயம் மற்றும் சுயாட்சிக்கான சின்னமாக விளங்குகிறது.

முன்னேற்றம் என்பது, ஒவ்வொரு பகுதிக்கும் வள ஆதாரங்களையும், வாய்ப்புகளையும் சுயாட்சியையும் வழங்குவதே. அப்போதுதான் அனைத்துத் துறைகளிலும் முழுமையான மேம்பாட்டைக் காண இயலும். தனது மாநிலங்களுக்குச் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதில்தான் ஒரு நாட்டின் வலிமை இருக்கிறது என்பதை உணரும் போதுதான் முன்னேற்றம் பிறக்கும்.

‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்பதே நமது பலம். நமது மொழிகளும், பண்பாடும், வழமைகளும் தடைகள் அல்ல. அவை வேறு வேறு மாநிலங்களைச் சேர்ந்த மக்களுடன் சேர்ந்து மானுட நேயத்தைக் கொண்டாடுவதற்கான பாலங்கள்.

**மொழி, மாநில உரிமைகள், நம் பண்பாட்டு அடையாளங்களை காப்போம்!**

இறுதியாக, மொழி உரிமைகள் மதிக்கப்படவும், மாநில உரிமைகள் உயர்த்திப் பிடிக்கப்படவும், பண்பாட்டு அடையாளங்கள் சிறப்பிக்கப்படவுமான ஒரு வருங்காலத்தை நாம் அனைவரும் கனவு காண்போம்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து, ஒவ்வொரு மொழியும் வளரவும், ஒவ்வொரு பண்பாடும் பெருகவும், ஒவ்வொரு தனிநபரும் தன்னுடைய பாரம்பரியத்தில் பெருமை கொள்ளவும் ஒரு புதிய சகாப்தத்தை நாம் எழுதுவோம். நம் நாட்டின் மாநில மொழிகளைப் பாதுகாக்க இலக்கிய வளத்தைப் பாதுகாக்க - மாநில உரிமை - கல்வி உரிமை காக்க தமிழ்நாடு மற்றும் கேரள மக்கள் இணைந்து பாடுபடுவோம்.

2019 நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பா.ஜ.க. முழுமையான தோல்வியைத் தழுவியது. இந்த இரண்டு மாநிலங்களிலும் அந்தக் கட்சி ஒரு இடத்தைக் கூட வெல்ல முடியவில்லை.

**பிரித்தாளும் சக்திகளுக்கு நம் மாநில மக்கள் எதிரானவர்கள்!**

நமது மக்கள் எவ்வளவு தூரம் முற்போக்கானவர்கள், பிரித்தாளும் சக்திகளுக்கு எவ்வளவு தூரம் எதிரானவர்கள் என்பதைக் காட்டுவதற்குப் பா.ஜ.க.வின் அந்தத் தோல்வி சான்றாக இருக்கிறது. 2024 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தல்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இந்திய ஒன்றியத்தையும், நமது மாநிலங்களையும் பாதுகாக்க, பாசிஸ பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும். அந்தப் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

**திராவிட இயக்கத்தை, `எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கம்’ என்பார்கள். திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் மட்டுமே 100க்கும் அதிகமான இதழ்களை நடத்தினார்கள். முடிவெட்டும் கடைகள் - டீ கடைகளைப் படிப்பகம் ஆக்கினார்கள்.**

**அவர்களின் எழுத்துகளும் இலக்கியப் படைப்புகளும் இதுநாள் வரையும் எங்களுக்கு உந்துசக்தியாக இருந்துகொண்டிருக்கின்றன. அது வருங்காலத்திலும் அப்படியே இருக்கும் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன். அந்த திராவிட இயக்கத் தலைவர்களின் எழுத்துகளும் சிந்தனைகளும் படைப்புகளும்தான் தமிழ்நாட்டில் அழிவு சக்திகள் நுழைய முடியாத அளவுக்குப் பாதுகாப்பு அரண்களாக இருக்கின்றன.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலந்தூர் ம. ஆபிரகாம்

### டிசம்பர் 2 (1987)



**ஆலந்தூர் நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய சட்டப்பிரிவு நகல் எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக, 1986ஆம் ஆண்டு ஆளுங்கட்சியால் சட்டமன்றத்தில் பதவிப் பறிப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, பதவி பறிக்கப்பட்ட பேராசிரியர் உள்ளிட்ட பதின்மருள் ஆபிரகாமும் ஒருவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடி நிலை காலத்தில் ‘மிசா’ கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**“கழகத்தின் இரும்புத் தூண், எதிர்ப்புக்கும், இன்னலுக்கும், அடக்குமுறைக்கும் என்றுமே வளைந்து கொடுக்காத உறுதி படைத்த கொள்கைக் குன்றம்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில்

## மழை தொடர்பான புகார்களுக்கு உதவி எண்கள் அறிவிப்பு!

*சென்னை, டிச.2- செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் மழை தொடர்பான புகார்களுக்கு உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*திருவள்ளூரில் மழையால் பாதிப்பு தொடர்பான பொதுமக்கள் புகார் தெரிவிக்க உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*கட்டுப்பாட்டு அறைக்கு 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*04427 66417 - 044 27666746 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவும் தகவல் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் தெரிவித்துள்ளார்.*

*இதை தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் மழை பாதிப்பு தொடர்பான புகார்களை தெரிவிக்க உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*செங்கல்பட்டு மாவட்டத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாட்ஸ்அப் எண் - 9444272345, கட்டணமில்லா தொலைபேசி எண் - 1077, தொலைபேசி எண்கள் - 044 - 27427412, 27427414 என்ற எண்கள் மூலம் புகார்களை அளிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

---

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை!

### டிசம்பர் 31-க்குள் விண்ணப்பிக்க வேண்டும்! தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, டிச.2 - அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்குத் திங்கள்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டம் தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-*

*தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாகச் சீரிளமைத் திறம் கொண்ட அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.*

*முதுமைக்காலத்திலும் பொருள் வறுமை, தமிழ்த் தொண்டர் பெருமக்களைத் தாக்காவண்ணம் திங்கள்தோறும் ரூ.3,500/ம், மருத்துவப்படி ரூ.500/ம் என நான்காயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பெறுகிறது. தமிழுக்காகத் தம் வாழ்நாளை ஈந்துவரும் பெருமக்களுக்கு இந்த உதவித்தொகை அவர்கள் வாழுங்காலமெல்லாம் தமிழ்த் திருப்பணியில் தொய்வின்றி ஈடுபடும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது. தகைமைமேல் தகைமையாக, அகவை முதிர்ந்த தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது.*

*தமிழ் காத்த தகைமைக்காக உதவித் தொகை பெற்ற தமிழறிஞர் பெருமக்களின் மறைவுக்குப் பின்னர், அவரின் மரபுரிமையருக்கு, அவர்தம் வாழ்நாள் முழுவதும் ரூ.2500/ மற்றும் மருத்துவப் படி ரூ.500/ என அத்திருத்தொண்டு தொடர்கிறது.*

*தமிழாய்ந்த தமிழ் மகனின் தமிழரசு தமிழ்த் தொண்டர்களைக் காக்கும் இப்பணியில் இதுகாறும் 1234 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் பயனடைந்துள்ளனர். அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் மறைவிற்குப் பிறகு அவர்களின் மரபுரிமையர்கள் 70 பேருக்கு தற்போது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.*

*அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் அகவை முதிர்ந்த தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து 2023-2024ஆம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.*

*விண்ணப்பிக்கத் தகுதிகள்: 1) ‘01.01.2023 ஆம் நாளன்று 58 வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.*

*2) ‘ஆண்டு வருவாய் ரூ.72,000/க்குள் இருக்க வேண்டும்’ (வட்டாட்சியர் அலுவலகத்தில் இணைய வழியில் பெறப்பட்ட வருமானச் சான்று இணைக்கப் படவேண்டும்.*

*3)‘தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான விவரக் குறிப்பு’.*

*4) ‘தமிழ்ப்பணி ஆற்றி வருவதற்கான பரிந்துரைச் சான்று இரண்டு தமிழறிஞர்களிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்’.*

*அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் விண்ணப்பப்படிவத்தினை மண்டல / மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை/ உதவி இயக்குநர் அலுவலகத்திலேயே நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலோ (www.tamilvalarchithurai.tn.gov.in) கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

*அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுபவருக்கு முன்னர்க் கூறியது போல், திங்கள்தோறும் உதவித்தொகையாக ரூ.3,500/ம், மருத்துவப்படி ரூ.500/ம் அவருடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.*

*நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள், அந்தந்த மாவட்டங்களில் மாவட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் மண்டல, மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் இயங்கிவரும் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தின் வாயிலாக மட்டுமே அனுப்பப்பெற வேண்டும்.*

*மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலகங்கள் வழியாக அல்லாது, நேரடியாக தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படாது.*

*சென்னையைச் சேர்ந்தவர்கள் மட்டும் நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்களை இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச் சாலை, எழும்பூர், சென்னை - 600 008. என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்பலாம். நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் 31.12.2023 ஆம் நாளுக்குள் அந்தந்த மாவட்டத் தமிழ் வளர்ச்சித்துறை அலுவலங்களுக்கு வந்து சேர வேண்டும்.*

---


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

கலைஞர் 100 1924 - 2023

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 82/2023 நாள். 29.11.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 6,9,31,47, 51,53,54,58,60,68,82, 89,92க்குட்பட்ட பகுதிகளில் கழிப்பிடம் கட்டுதல் | 14 பணி | 14.12.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 15.12.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –1, தொலைபேசி எண். 0422 2396026.
Email: commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 633/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 30.11.2023


நாள் : 02.12.2023
சனிக்கிழமை
இடம் : கோவை
ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்
ARASU ARTS
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக. வருக.. என அன்புடன் வரவேற்கிறோம்...
திரு. சு.முத்துசாமி
மாண்புமிகு வீட்டு வசதி நகர்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
திரு. V.செந்தில்பாலாஜி
தமிழ்நாடு அமைச்சர்
கரூர் மாவட்ட கழகச் செயலாளர்
தொ.அ.ரவி
கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
வி.சி.ஆறுக்குட்டி Ex.MLA.
கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி
கே.இ.பிரகாஷ்
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்
பி.எஸ்.சீனிவாசன்
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்
இரா.ராஜீவ்காந்தி
கழக மாணவர் அணித் தலைவர்
எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம்
கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அமைப்பாளர்
அசோக்பாபு ஆறுக்குட்டி B.Tech.,
மாவட்ட துணைச் செயலாளர் – கோவை வடக்கு மாவட்டம்
மனோஜ் முத்துசாமி B.A.,
துணை அமைப்பாளர் – கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி
கோவை வடக்கு மாவட்ட தி.மு.க (ம) இளைஞர் அணி



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், கழகத்தின் இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் மேம்பாட்டு துறை, சிறப்புத்திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீலகிரி மாவட்டம் உதகை இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தருவதையொட்டி உதகை என்.சி.எம்.எஸ். மைதானத்தில் அமையவிருக்கும் திடல் மற்றும் மேடை பணிகளை ஆய்வு மேற்கொண்டார். உடன் நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மேற்கு மாவட்டம், அரூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா - நல உதவிகள்!

தருமபுரி, டிச. 2 - வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களின் வழி காட்டுதலின்படியும், தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர். முனைவர்.பி. பழனியப்பன், ஆலோசனை படியும்,கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொய்ப் பட்டியில் அரூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணியினரின் ஏற்பாட்டில், அரூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கோ.சந்திரமோகன் தலைமையில் பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு மற்றும் நோட்புக் பென்சில் வழங்கி கொண்டாடப்பட்டது. விழாவில் அவைதலைவர் ஜெய்னுலாப்தீன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ரஜினிமாறன், முத்து மற்றும் ஸ்ரீராம், அபிஷேக், சுபாஷ், சதீஷ், லத்தீப்,ராஜ்குமார், பெ.இந்திரஜித், ஒன்றிய அமைப்பாளர்கள் பழனி, மதி மற்றும் கழக நிர்வாகி கள் உமாபதி,குருநாதன், திருப்பதி, ராஜ்குமார், கதிர்வேல்,சிவலிங்கம், அரவிந்தன், கமல்நாதன்,முத்துதமிழ், சந்துரு, மற்றும் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி சார்பு அணி பொறுப்பாளர்கள், பேரூர், ஒன்றிய, கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட 100க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (2.12.2023 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு நாகையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. சேலத்தில் டிசம்பர் 17ம் தேதி நடைபெற உள்ள மாநில இளைஞர் அணி மாநாடு குறித்து

2. பி.எல்.ஏ.2 மற்றும் பி.எல்.சி. பணிகளை விரைவுப் படுத்துதல்.

3. கழக ஆக்கப்பணிகள்.

**என்.கௌதமன்,**
செயலாளர்
நாகை மாவட்ட தி.மு.க.



கோவை மாநகர் மாவட்ட ஆதிதிராவிடர் நல குழுவின் சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சி மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட அமைப்பாளர் டெம்போ சிவா தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில இணைச்செயலாளர் மண்டல பொறுப்பாளர் திப்பம்பட்டி ஆறுசாமி கலந்து கொண்டு பிறந்தநாள் கேக் வெட்டி இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் ஜார்ஜ் மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், பகுதிக்கழகச் செயலாளர் உள்பட பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாநகர் மாவட்ட ஆதிதிராவிடர்நல குழு நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## சிவகங்கையில்

### ரூ.3.50 கோடியில் 100 தினசரி சந்தைக் கடைகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பணிகளை துவக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 2- சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகராட்சி சார்பில் தினசரி சந்தைக்கான கட்டிட பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடியே 49 லட்சத்தில் 100 கடைகள் கட்டுவதற்கான பணிகளை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த தினசரி சந்தையில் கேண்டீன் வசதி, இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, மற்றும் கழிப்பறை வசதியுடன் 100 கடைகள் கட்டப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் துரை. ஆனந்த் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் சுகிர்தா, மாவட்டக் கழக துணைச் செயலாளர் கே.எஸ்.எம். மணிமுத்து, நகர்மன்ற உறுப்பினர்கள் அயூப்கான், ஜெயகாந்தன், விஜயகுமார், சரவணன், கார்த்தி முருகேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், துணை அமைப்பாளர்கள் ராஜாஅமுதன், பி.முகமதுகனி, வழக்கறிஞரணி பாஸ்கரன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்க முத்து, மகளிர் அணி மஞ்சுளா, நகர் மன்ற துணை தலைவர் கார்கண்ணன் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் தனசேகரன் மாவட்ட 'கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நகர்மன்ற உறுப்பினர் அயூப்கான் நன்றி கூறினார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எம்.எஸ்.கே. ராஜேந்திரன்
## டிசம்பர் 2 (1990)



தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்.

இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர்.

இராமநாதபுரம் நகர மக்களின் பேரன்பிற்கும் பெருமரியாதைக்கும் உரியவர்.

அன்பும் அடக்கமும் பண்பும் பணிவும் கொண்டவர்.

“இரக்கமற்ற சாவே! அடுக்குமா உனக்கு” எனக் கேட்டு தலைவர் கலைஞரை கண்ணீர் விடச் செய்தது இவரது மறைவு.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# தருமபுரி மேற்கு மாவட்ட ஆலோசனை - ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் பி.பழனியப்பன் அறிவிப்பு!



தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் மற்றும் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த 887 வாக்குச்சாவடி முகவர்களுக்கான (பி.எல்.ஏ.-2) ஆலோசனைக் கூட்டம் கீழ்காணும் இடங்களில் அட்டவணையில் உள்ளவாறு நடைபெறும்.

இக்கூட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.-2) தேர்தல் பணி,டிசம்பர் 17 அன்றுசேலத்தில் நடைபெறும் 2வது இளைஞரணி மாநாடு, 'நீட்' விலக்கு கையெழுத்து மற்றும் இல்லந்தேடி இளைஞரணி உறுப்பினர்கள் சேர்த்தல் போன்ற கழக ஆக்கப் பணிகள் குறித்து கூட்டம் நடைபெற இருக்கிறது.

அட்டவணையில் உள்ளவாறு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய, பேரூர் கழ கசெயலாளர்கள், ஒன்றியத்திற்கான பொறுப்பாளர்கள், பேரூராட்சிக்கான பொறுப்பாளர்கள், மற்றும் பி.எல்.ஏ.-2 வாக்குச் சாவடி முகவர்கள், ஊராட்சி / பேரூராட்சி பாகங்களுக்கான பொறுப்பாளர்கள், மாவட்டக் கழகத்தால் நியமிக்கப்பட்ட மேற்பார்வையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி

நாள் : 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை

தலைமை : எஸ்.எம்.அன்பழகன் (எ)அன்பு
தொகுதிபார்வையாளர்
தொண்டர் அணி,மாநிலதுணைசெயலாளர்

| வ.எண் | ஒன்றியம் | பாகங்கள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | தருமபுரிகிழக்கு | 55 | காலை 9.30மணி | ஸ்ரீனிவாசபெருமாள் திருமணமண்டபம் கடத்தூர். |
| 2 | தருமபுரிவடக்கு | 47 | | |
| 3 | கடத்தூர் மேற்கு | 45 | | |
| 4 | கடத்தூர் பேரூர் | 10 | | |
| 5 | தருமபுரிமேற்கு | 12 | | |
| | மொத்தம் | 169 | | |
| | | | | |
| 6 | மொரப்பூர் மேற்கு | 4 | மதியம் 2.00 மணி | நாராயணசாமிகவுண்டர் திருமணமண்டபம், பாப்பிரெட்டிப்பட்டி |
| 7 | கடத்தூர் கிழக்கு | 40 | | |
| 8 | பாப்பிரெட்டிப்பட்டிமேற்கு | 44 | | |
| 9 | பாப்பிரெட்டிப்பட்டிகிழக்கு | 34 | | |
| 10 | பொ.மல்லாபுரம் பேரூர் | 12 | | |
| 11 | பாப்பிரெட்டிப்பட்டிபேரூர் | 9 | | |
| 12 | அரூர் மேற்கு | 2 | | |
| | மொத்தம் | 145 | | |

### அரூர் சட்டமன்றத் தொகுதி

நாள் : 04.12.2023 திங்கட்கிழமை

தலைமை : சேலம் ரா.தமிழரசன்,
தொகுதிபார்வையாளர்
மாணவர் அணி,மாநில துணைச் செயலாளர்.

| வ.எண் | ஒன்றியம் | பாகங்கள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | அரூர் கிழக்கு | 76 | காலை 9.30 மணி | கொங்குதிருமணமண்டபம் கோபிநாதம்பட்டி கூட்ரோடு |
| 2 | அரூர் மேற்கு | 50 | | |
| 3 | பாப்பிரெட்டிப்பட்டிகிழக்கு | 25 | | |
| 4 | கடத்தூர் கிழக்கு | 3 | | |
| | மொத்தம் | 154 | | |
| | | | | |
| 6 | அரூர் வடக்கு | 45 | மதியம் 2.00 மணி | செந்தூர் மஹால் திருமணமண்டபம், பனந்தோப்பு |
| 7 | அரூர் பேரூர் | 26 | | |
| 8 | மொரப்பூர் கிழக்கு | 30 | | |
| 9 | மொரப்பூர் மேற்கு | 35 | | |
| 10 | கம்பைநல்லூர் பேரூர் | 11 | | |
| | மொத்தம் | 147 | | |

### பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி

நாள் : 05.12.2023 செவ்வாய்கிழமை

தலைமை : அ.தமிழ்மாறன்,
தொகுதிபார்வையாளர்
தகவல் தொழில்நுட்பஅணிதுணைச்செயலாளர்.

| வ.எண் | ஒன்றியம் | பாகங்கள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | பாலக்கோடுமேற்கு | 49 | காலை 9.30 மணி | வள்ளல் பாரிதிருமணமண்டபம், மாரண்டஅள்ளி. |
| 2 | பாலக்கோடுமத்தியம் | 70 | | |
| 3 | பாலக்கோடுபேரூர் | 16 | | |
| 4 | மாரண்டஅள்ளிபேரூர் | 8 | | |
| | மொத்தம் | 143 | | |
| | | | | |
| 6 | காரிமங்கலம் மேற்கு | 54 | மதியம் 2.00 மணி | DSRதிருமணமண்டபம், காரிமங்கலம். |
| 7 | காரிமங்கலம் மத்தியம் | 27 | | |
| 8 | காரிமங்கலம் கிழக்கு | 36 | | |
| 9 | காரிமங்கலம் பேரூர் | 12 | | |
| | மொத்தம் | 129 | | |

**பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.11.2023) முகாம் அலுவலகத்தில், சட்டப்பேரவைச் செயலாளர் கி.சீனிவாசன் சந்தித்து, பணி நீட்டிப்பும், முதன்மைச் செயலாளராக பதவி உயர்வும் வழங்கியமைக்காக நன்றி தெரிவித்து வாழ்த்துப் பெற்றார்.

# பெரம்பலூரில் வளர்ச்சித்திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், டிச.02-

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.8.10 கோடி மதிப்பீட்டில் பல்வேறு முடிவுற்ற திறந்து வைத்தும்,வளர்ச்சித் திட்ட பணிகளை துவக்கி வைத்தும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

ரூ.7,79,82,500 கோடி மதிப்பில் பெரியவெண்மணியில் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கான புதிய கட்டடத்திற்கு போக்குவரத்துத்துறை அமைச்சர் அடிக்கல் நாட்டினார். பின்னர் ஒலைப்பாடி ஊராட்சி கல்லை கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ.13.16 லட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள புதிய நியாய விலைக்கடை பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார், அதனைத்தொடர்ந்து, ஒலைப்பாடி கிராமம், கிராம நிர்வாக அலுவலகம் அருகில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ், ரூ.8.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக்கடையினையும், வேப்பூர் பேருந்து நிலையம் அருகில் குன்னம் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.9.13 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக்கடையினையும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

பின்னர் போக்குவரத்துத்துறை அமைச்சர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து மக்களுக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள்.

மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, அவர்களின் கல்வித்தரம் மேம்பட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்து கொடுத்து வருகின்றது. வேப்பூர் அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் ரூ.2.77 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள அரசு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதியினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைக்கின்றார்கள். மேலும், குன்னம் வட்டத்திற்குட்பட்ட பெரியவெண்மணி ஊராட்சியில் ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போது சுமார் 100 மாணவர்களுடன் தற்காலிக கட்டடத்தில் இயங்கிவரும் அரசு தொழிற்பயிற்சி நிலையமானது வெகு விரைவில் அரசின் புதிய சொந்த கட்டடத்திற்கு மாற்றப்படும்.

இந்த அரசு தொழிற் பயிற்சி நிலையமானது, 1540.50 சதுர மீட்டர் பரப்பளவில் தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட உள்ளது. தரைத்தளத்தில் போர்டிகோ மற்றும் வரவேற்பறை, முதல்வர் அறை, அலுவலகம், நூலகம், வகுப்பறை, பிளேஸ் மென்ட் மற்றும் கவுன்சிலிங் அறைகள், கழிவறை உள்ளிட்ட வசதிகளும் முதல் தளத்தில் வகுப்பறைகள் ஆய்வகம் மற்றும் பல் நோக்கு அறை, மற்றும் கழிவறைகளும் கட்டப்பட உள்ளது. தரை தள பணிமனையில் சிவில் வரைவாளர், எலக்ட்ரீசியன், தைத்தல், மற்றும் பிட்டர் பணிமனை ஆகியவைகளுடன் கட்டப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் முத்தமிழ்ச்செல்வி மதியழகன், வருவாய் கோட்டாட்சியர்(பொ) திரு.சத்திய பாலகங்காதரன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் அ.கருணாநிதி, வட்டாட்சியர் கோவிந்தம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வகுமார், பொதுப்பணித் துறை உதவி பொறியாளர் தேவேந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



சேலத்தில் 2வது இளைஞர் அணி மாநாட்டினையொட்டி கழக இளைஞரணியினர் மேற்கொண்ட இருசக்கர வாகனப் பிரச்சார பேரணி சேலம் மாநாட்டுத் திடலில் நிறைவு பெற்றது. நிறைவு விழா நிகழ்வில் மாநாட்டுத் திடலில் நமது தி.மு.க. ரைடர்கள் தங்களது இரு சக்கர வாகனங்களைக் கொண்டு “மாநில உரிமை மீட்போம்” என்ற முழக்கத்தினை நிலத்தில் அமைத்ததன் கழுகுப் பார்வை. அந்த முழக்க வாகன அமைப்பின் முன் நின்று கழக முதன்மைச் செயலாளர் உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, இருசக்கர வாகன பிரச்சாரக் குழு ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ்மாறன், சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி மற்றும் இளைஞரணி, மாணவரணி, நிர்வாகிகள் கலந்துகொண்டு முழக்கமிட்டனர்.

# சென்னையில் பூங்காக்களை மூட உத்தரவு!

## புயல் கரையை கடக்கும் வரை!

சென்னை, டிச. 2-

வங்கக்கடலில் நிலை கொண்டு இருக்கும் காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்து வருகிறது. சென்னையில் நேற்று முன்தினம் முதல் விட்டு விட்டு மழை பெய்துவருகிறது. இதனால், சாலைகளின் பல்வேறு பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளதால், மக்கள் அவதியடைந்துள்ளனர். சென்னையில் பிற்பகலுக்கு மேல் மழை குறைந்த நிலையில், தற்போது மீண்டும் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக கிண்டி, ஈக்காட்டுத்தாங்கல், எழும்பூர், சைதாப்பேட்டை, வேளச்சேரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வருகிறது.இந்நிலையில் கனமழை எச்சரிக்கையையடுத்து சென்னையிலுள்ள அனைத்து பூங்காக் களையும் மூட மாநகராட்சி நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

கனமழை எச்சரிக்கையை திரும்பப்பெறும் வரை பொது மக்கள் பாதுகாப்பு கருதி பூங்காக்களை மூட உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



# உடன்பிறப்பே... 34

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த நாகூர் ஹனிபா அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# நாகூர் ஹனிபா : கழகத்தின் இசைக் குரல்!




“ஓடி வருகிறான் உதயசூரியன்”

“அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா”

“கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே”

அடுத்தடுத்து ஒலிக்கும் பாடல்களால் கழக மேடைகளைக் கட்டிப்போட்ட கம்பீரக் குரல். பெயரைச் சொன்ன மாத்திரத்தில், நினைவில் இசை அலைகளை எழுப்பும் இன்பக்குரல். இரண்டாயிரத்துக்குப் பிறகு பிறந்து, கழகப் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்ட இளைய உடன்பிறப்புகள் கழக மேடைகளில் தவறவிட்ட தன்மானக் குரல். அந்தக் குரலுக்குரிய உடன்பிறப்பு நாகூர் இ.எம்.ஹனிபா.

‘இறைவன் இசை வடிவானவன்’ எனச் சொல்வதுண்டு. அந்த இறையியலை தன்மான இயக்கத்துக்குத் தாரை வார்த்தவர் நாகூர் ஹனிபா எனச் சொன்னால் மிகையில்லை.

கழகத் தலைவராக, கலைஞரின் சுற்றுப்பயணங்கள் திட்டமிடப்பட்டு இருந்தாலும், திட்டமிடமிடப்படாத பல தாமதங்கள் அந்தச் சுற்றுப்பயணத்தில் நிகழும். அப்படியான நேரங்களில் அவர் வந்து சேரும் வரை கழக மேடைகளைக் கட்டுக்கோப்பாக வைக்கவும், தன்மானக் கலை உணர்ச்சி ஊட்டவும், நாகூர் ஹனிபாவின் குரல், களம் பல கண்ட வீரனாகச் செறிவோடு இயங்கும்.

**தமிழுக்கு ஒரு தீங்கென்றால், அந்தத் தீங்கினைத் தடுத்து நிறுத்திட, தமிழர் நலன் காத்திட, தமிழ்மொழி காத்திட, தோள் தட்டி தன்னை ஒப்படைத்துக் கொள்ளக் கூடிய தியாகச் சீலர் நாகூர் ஹனிபா.**

## பெரியாரைப் போற்றிய பாடல்

பெயரோடு நாகூர் ஒட்டிக் கொண்டிருந்தாலும் இவர் பிறந்தது, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வெளிப்பட்டினம் என்கிற சிற்றூரில்தான். 1925-ஆம் ஆண்டு முகம்மது இஸ்மாயில் - மரியம் பீவி ஆகியோருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர் ஹனிபா. தந்தையாரின் பூர்வீகம் நாகூர் என்பதால், இவரது பெயரோடு நாகூரும் சேர்ந்து கொண்டது. பின்னர் நாகூருக்கு, குடும்பம் இடம்பெயர்ந்துள்ளது.

ஹனிபாவின் தந்தை, பெரியாரின் சுயமரியாதைப் பிரச்சாரத்தில் ஈர்க்கப்பட்டவராக இருந்தார். அந்தச் சிந்தனைகளை அறியத் தொடங்கிய ஹனிபா, தனது 10 வயதுகளில் சுயமரியாதைச் சிந்தனையை, பெரியாரை அறியத் தொடங்குகிறார்.

இயல்பிலேயே இருந்த இசை அறிவு, தமிழ் உணர்வு, பயிற்சி ஆகியவற்றால் இஸ்லாமிய பக்திப் பாடல்களைப் பாடத் தொடங்கி இருந்த ஹனிபா, பெரியார் குறித்த பாடல்களைப் பாட, அது மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது.

**“பேரறிவாளர் அவர் பெரியார் எனும் ஈவெரா**
**ஆரறிவார் பெருமை தமிழா”**

ஆபிதின் காக்கா எழுதிய இந்தப் பாடலை ஹனிபா குரலில் கேட்ட தமிழர்களுக்கு இன உணர்வும், மான உணர்வும் ஏற்பட்டது, என வரலாற்றுக் குறிப்புகளைக் காண முடிகிறது.

## கழகத்துக்குக் ‘குரல்’ தந்தவர்

1938-ஆம் ஆண்டில், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரமடைந்த நேரத்தில், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார் தந்தை பெரியார். பல ஊர்களில் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டார். அவர் கலந்துகொண்ட அத்தனை கூட்டத்திலும் தவறாது மேடை ஏறியவர் ஹனிபா. அப்போது அவருக்கு 13 வயது.

ஆச்சர்யம் என்னவெனில், ஹனிபா பாடல்களை ரசித்து தந்தை பெரியாரே ரொக்க அன்பளிப்பு அளிப்பாராம். அதே ஆண்டில், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில், கறுப்புக் கொடி காட்டி கைது செய்யப்பட்டுள்ளார் ஹனிபா. இப்படித் தனது அரசியல் சேர்மானங்களுக்கு ஏற்ப இசையை, தனது குரலை சுயமரியாதைக் கொள்கைகளை விதைக்கவும் பயன்படுத்தத் தொடங்கினார்.

இவரது தமிழ்ப் பற்றும், சுயமரியாதை உணர்வும் இயல்பிலேயே திருவாரூரில் மையம் கொண்டிருந்த கலைஞரை ஈர்த்ததில் வியப்பில்லை. ஆரூரில் இவர் பாடிய பாடல்களில் வற்றிய ஆற்றின் ஊற்றும் கசியும். திராவிடர் இயக்கத்தில் தீவிரமாக இயங்கி வந்த ஹனிபா, கழகம் தொடங்கப்பட்ட போதும் மிகத் தீவிரமாகக் கொள்கைக் காரராகத் திகழ்ந்தவர்.

ஹனிபாவின் தொடர்ச்சியான அரசியல் இசைப் பயணம் கழகம் தொடங்கப்பட்ட போதும் தொடர்ந்தது. குரலால் கழகக் கொள்கைகளைக் கொண்டு சேர்க்கத் துணை நின்றது.

## நாகை வேட்பாளர்

“பெரியார் பெயரை உச்சரித்தால், அண்ணாவின் பெயரைச் சொன்னால் ஒருவித முகக்கோணலுடன் சமுதாயத்தில் பலர் பார்த்து ஒதுக்கிய நேரத்தில் - அவர்களின் பெயரைச் சொன்னால் பிழைக்கவே முடியாது எனும் அச்சுறுத்தல் ஆட்டிப்படைத்த நேரத்தில் - இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, மேடைதோறும் இசைமுழக்கம் செய்த அனிபாவின் இளமைத் தோற்றத்தைக் கண்டிருக்கிறேன்” என அந்தக் காலத்தைக் குறிப்பிடுகிறார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அண்ணாவின் அடியொற்றி, கலைஞரின் நட்பு கொண்டு தனது களப்பணிகளாலும், குரல் வளத்தாலும் கழகத் தொண்டர்களைக் கட்டிப்போட்டவர், இஸ்லாமியப் பாடல்கள், திரைத்துறைப் பாடல்கள் எனப் பங்களிப்பும் செய்துள்ளார். எனினும், முழு முற்றாக கழக மேடைகள்தான் ஹனிபாவின் அடையாளமாக இருந்தன. ஒலிவாங்கி இல்லையென்றாலும் மேடையிலிருந்து கடைசி இருக்கை வரை கேட்டு மகிழும் கம்பீரக் குரலாக ஹனிபா குரல் இருந்தது.

1955-ஆம் ஆண்டு அவர் பாடிய ‘அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா’ பாடல், பட்டி தொட்டியெல்லாம் ஒலித்தது. கழகத்தின் கொள்கைகளைப் புரிந்து கொள்வதற்கு முன்னர், குரல் வழி உணரத் தொடங்கினர் மக்கள். 1957-ஆம் ஆண்டு கழகம் முதன்முதலில் தேர்தலில் நிற்கும்போது, நாகப்பட்டினம் தொகுதியில் நிற்க விரும்பினார் கலைஞர். ஆனால், பேரறிஞர் அண்ணா, கலைஞரை கடைசிநேரத்தில் குளித்தலை தொகுதியில் நிற்க வைத்தார். அதேநேரத்தில், நாகை தொகுதிக்கு அண்ணா அறிவித்த வேட்பாளர் நாகூர் ஹனிபா.

கழக மேடைகளில் பாடுபவர் என்பதற்காக ஹனிபாவுக்கு வாய்ப்பு கிடைத்திடவில்லை, அவர் தீவிர கொள்கைக்காரராக இருந்தவர். கழகத்தின் அத்தனை போராட்டங்களிலும் முன்னிலையில் இருந்தவர். குரல் வழி பங்களிப்பு கூடுதல் திறமையாக இருந்தது. கழகத்தின் அத்தனை வளர்ச்சிப் படிநிலைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் என்பதால், வேட்பாளர் வாய்ப்பு தேடி வந்தது. ஆனால், மிட்டா மிராசுகள் நின்ற தேர்தலில், கழகம் கால் பதித்ததே பெரும் போராட்டமாக இருந்த சூழலில் நாகூர் ஹனிபா 13 சதவிகித வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்தில் இருந்தார். தேர்தலில் வெற்றி வாய்ப்பு இல்லையென்றாலும், மக்கள் மனதில் வெற்றிக்கொடி நாட்டியவராக இருந்தவர்.

## வக்பு வாரியத் தலைவர்

கழக மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், பிரச்சாரம் எனச் சுற்றிச் சுழன்ற ஹனிபாவின் பயணத்துக்குப் பரிசாக 1971-ஆம் ஆண்டில் சட்டமேலவை உறுப்பினராக்கினார் கலைஞர். கழகத்தின் சோதனையான காலகட்டத்தில், கலைத்துப் போடப்பட்ட விளையாட்டுபோல கழகத்தினர் திகைத்த நேரத்தில் ‘வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததடா’ என இவர் குரலெடுத்துப் பாடியது கோடிக்கணக்கான தொண்டர்களின் இதயக் குரலாக எதிரொலித்தது.

இவரின் இயக்கப் பிடிப்பையும், இசைத் தொண்டினையும் பாராட்டும் வகையில், 1989-ஆம் ஆண்டு கழகத்தின் முப்பெரும் விழாவில், கலைஞர் விருதினை தனது கரங்களால் கொடுத்து மகிழ்ந்தார் கலைஞர். பின்னர் வக்பு வாரியத் தலைவராகவும் நியமித்து அழகு பார்த்தார். கலைஞரின் ஆருயிர் நண்பர், கோடான கோடி தொண்டர்களின் இதயக் குரல், தனது 90-வது வயதில் 2015-ஆம் ஆண்டில் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது.

“சிறு வயதிலேயே தமிழ், தமிழுணர்வுடன் வளர்ந்தவர் நாகூர் ஹனிபா. தமிழுக்கு ஒரு தீங்கென்றால், அந்தத் தீங்கினைத் தடுத்து நிறுத்திட, தமிழர் நலன் காத்திட, தமிழ்மொழி காத்திட, தோள் தட்டி தன்னை ஒப்படைத்துக் கொள்ளக் கூடிய தியாக சீலர் நாகூர் ஹனிபா. என்னை விட ஓரிரு வயது குறைந்தவராயினும் நரைத்த தாடியுடன் கழகத்தின் கொடிமரமாய் மிடுக்காகத் திகழ்வதையும் கண்டு பூரிப்புக் கொள்கிறேன்” எனப் புகழாரம் சூட்டினார் கலைஞர். கலைஞரின் சொற்கள் கொண்டு, ஹனிபாவின் பாடல் கொண்டு கழகக் கொடிமரம் என்றைக்கும் இளமையாகப் பூத்து நிற்கும். கல்வெட்டாக நிலைத்து நிற்கும்!

...துடிக்கும்

## காவியாகும் மருத்துவம்!

“மக்களின் உயிர் காத்து, அவர்களின் ஆயுளை நீட்டிக்கும் நவீன அறிவியல் மருத்துவத்தை நீர்த்துப் போகச் செய்கிற வகையில் ‘மிக்ஸோபதி’, ஒருங்கிணைந்த மருத்துவம், ‘காமன் ஃபவுண்டேஷன் கோர்ஸ்ஸில்’, வேத கால மருத்துவம், ஆன்மிக மருத்துவம், சோதிட மருத்துவம் என்று போலி அறிவியலைத் திணிக்கும் முயற்சிகள் நடந்துகொண்டு வருகின்றன” என்று சில நாட்களுக்கு முன்பு நிகழ்ச்சி ஒன்றில், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் பேசியிருந்தார்.

அது எவ்வளவு உண்மை என்பதை, தற்போது தனது நடவடிக்கையின் மூலம் நிரூபித்திருக்கிறது தேசிய மருத்துவ ஆணையம். இந்த ஆணையம்தான் நம் நாட்டின் மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவர்கள் ஆகியோரை ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனம்.

இதுநாள் வரையில் அதனுடைய இலச்சினையில் அசோகர் சிங்கத் தூண்தான் இடம் பெற்றிருந்தது. தற்போது அதனை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் ‘தன்வந்த்ரி’ எனும் இந்துக் கடவுளின் படத்தை வைத்துள்ளது. ஆயுர்வேத மருத்துவ முறையைப் பின்பற்றுபவர்களின் கடவுளாக தன்வந்த்ரி இருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அந்த இலச்சினையில், ‘இந்தியா’ என்ற பெயர் நீக்கப்பட்டு, ‘பாரத்’ என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வியும், மருத்துவச் சேவையும் சாதி, மதம், பொருளாதாரப் பாகுபாடுகள் எதுவுமின்றி, அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் ஒரு நாட்டின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஏற்கெனவே, கல்விக்கு, காவிக் கறை பூசிய ஒன்றிய பா.ஜ.க. அரசு, இப்போது மருத்துவத்துக்குக் காவிச் சாயம் பூச வருகிறது.

## :.ப்ளாஷ்பேக்



## வணக்கம் வைத்த தலைவர்!

1993-ஆம் ஆண்டு கழகத்துக்கு ஏற்பட்ட சோதனை காலத்தில், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கிளைகள் தோறும் இருவண்ணக் கொடிகளை ஏற்றி, கழகத்தை மீட்டெடுத்ததில், அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளராகப் பணியாற்றிய தற்போதைய தலைவருக்கு முழுப்பங்குண்டு. அப்படிச் சுற்றுப்பயணம் செய்யும்போது ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், முசிறி ஒன்றியம், குணசீலம் ஊராட்சிக்கு வருகை தந்தார் தளபதி அவர்கள்.



சேகர் அருண்

முன்னாள் முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர் தே.பொன்னுசாமி அவர்களின் மகன், எனது தந்தையார் சேகர் அவர்கள் ஏற்பாடு செய்த கொடியேற்றும் நிகழ்வில், அப்போதைய மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அன்பு மாமா அன்பில் பொய்யாமொழி அவர்களுடன் வருகை தந்து கல்வெட்டு திறந்து, கழகக் கொடியேற்றினார். கொடியேற்றிவிட்டுப் புறப்படும் தருவாயில், சிறுவனாக இருந்த ஆர்வம் மிகுந்த உற்சாகத்தில் அவரது கார் அருகிலிருந்து, தலைவருக்கு வணக்கம் தெரிவித்தேன். உடன் பதிலுக்கு வணக்கம் தெரிவித்த மாண்பு, ஒரு சிறுவனையும் மதிக்கக் கூடிய பண்பு என்பது தலைவர் கலைஞருக்கு எப்படி இருந்ததோ, அதேபோல் இவரிடத்திலும் இருந்ததைக் கண்டு நாங்கள் மகிழ்ந்தோம்.

**-பி.சேகர் அருண், திருச்சி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மாற்றமில்லாத மரியாதை

**1969 பேரறிஞர் அண்ணா மறைந்த ஆண்டிலிருந்து, ஒவ்வோர் ஆண்டும் அவரது நினைவு நாளின்போது அமைதி ஊர்வலமாகச் சென்று அண்ணா சதுக்கத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செய்து வருகிறது கழகம். ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் இதில் எந்த மாற்றமும் கிடையாது. 1978-ஆம் ஆண்டில் மட்டும் அமைதி ஊர்வலத்துடன், அண்ணா சிலை திறப்பு விழாவும் நடைபெற்றது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 317




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131